உ
சிவமயம்

# சிவசக்தி ஞானானந்தம்



வெளியீடு 02 : 06.02.2008 அபிராமிப்பட்டர் தினம்

தை அமாவாசை தமிழ் 23.01.2008

சாவகச்சேரி வாரி வனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

தொகுப்பாசிரியர் :
சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் J.P
தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து ஞான பரம்பரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளிலிருந்து ஒரு நூற்றாண்டு காலத்தில் பல மகான்கள் தோன்றியுள்ளார்கள். அவ்வரிசையில் .......

சின்மயானந்த சுவாமிகள்

↓

சாஜன் சுவாமிகள்


↙ ↘

கனகரத்தினம் சுவாமிகள்

மகாதேவா சுவாமிகள்

↙ ↓

தவத்திரு கந்தையா சுவாமிகள்



ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்



↓

கணேசானந்த மகாதேவ சுவாமிகள்



## மகாவாக்கியங்கள்

1. 'அருள்வான் அருள்வாக்கு'
2. 'அறிவான் அருள்வாக்கு'
3. 'அருள்பார் அருள் ஒளி பார்'
4. 'அருள் தெரியும் பார்'
5. 'எம் பெருமான் நடாத்துவார்'
6. 'எம்பெருமான் உணர்த்துவார்'
7. 'நீ எது சரியென்று நினைக்கிறாயோ அதன்படி நட'
8. 'வேறொருவரையும் எதிர்பாராதே'

திருவாசகத்தையே படியுங்கள். அதுவே வாழ்விற்கு உறுதுணை என்றார்.
நாமும் அவர்களின் அடிச்சுவட்டில் நடந்து உய்வோமாக.
குருநாதன் திருவடிகளே சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஓம் ஸ்ரீ முத்துமாரித்தாயே சரணம் அம்மா
ஓம் ஸ்ரீ ராம ஜெயம்., ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ அற்புத ஆனந்த ஆஞ்சநேய சரணம்.

# சிவசக்தி ஞானானந்தம்



23. 1. 2008 அபிராமி பட்டர் தினம் தை
அமாவாசை (6.02.2008 புதன்கிழமை )

## வெளியீடு - (2)

சாவகச்சேரி வாரிவனம்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

சாவகச்சேரி.

தொகுப்பாசிரியர்
சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் ஜே. பி
கருணாலயம் தபாற் கந்தோர் வீதி
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நூற்படடியல்

தலைப்பு :- சிவசக்தி ஞானானந்தம்

தொகுப்பாசிரியர் :- சைவப்புலவர்
திரு குமாரசாமி சுமகலிங்கம்

வெளியீடு :- சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி
அம்மன் தேவஸ்தானம்

பதிப்பு :- பொதிகை 114 கண்டி வீதி சாவகச்சேரி

வெளியீட்டுத்திகதி:- 06.02.2008

பதிப்புரிமை :- ஆசிரியருக்கு

எழுத்து :- 12 புள்ளிகள்

தாள் :- 70 கிராம்

பிரதி :- 300

அன்பளிப்பு :- ஆலய நூல் வெளியீட்டுக்கு உரியது.

வாழ்க வளமுடன்
வாழ்க வையகம்
மனிதநேயம் காப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. கணபதி வணக்கம்
2. அருளாசிச் செய்தி
3. ஆசியுரை
4. வாழ்த்துரை
5. முன்னுரை
6. தலவரலாறு
7. கேதார கௌரி விரதம்
8. விநாயகர் வழிபாடு
9. சிவ வழிபாடு
   நமச்சிவாய மந்திரம்
   சிவ கவசம்
   சக்தி கவசம்
10. கோதார கௌரி பாமாலை
11. ஈஸ்வர தியானம்
12. சிவசக்தி பாமாலை
13. அபிராமி அந்தாதி
14. கப்பல் பாட்டு
15. நூற் பயன்
16. மங்களம்
17. வேண்டுகை
18. வாழ்த்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# காப்பு

ஓம் இன்முகத்தோனே இன்னருள்புரிபவனே ஈசன் திருமகனே
இடர்களைந்து இன்பந் தருபவனே ஓங்கார ரூபனே
சிவசக்தி சிவபாலனே சித்தியாய் முத்தியாய் திகழ் பரமார்தத்மாகிய
அத்தியின் உருவமான அண்ணலை போற்றி போற்றி

அண்ணலே அருள்வள்ளலே ஞானக்கொழுந்தே
ஞானச்சுடரே ஞானானந்தனே ஞானத்தின் காவலனே
சிவசக்தி திருவருளை சிவனடியார் பருகிடவேண்டுகின்றேன்
ஐங்கரத்தண்ணலே அடியவர்க்கிறைவனெ குஞ்சரமுகவனே
போற்றி போற்றி

இளம்பிறை ஏற்றவனே எமையாழ்பவனே ஏரம்பனே
தேவ தேவனே கஜமுக சம்மாரனே கஜமுககணேசனே
கலைஞானம் அருள்ஞானம் சிவசக்தி ஞானானந்தம்
பிணிக்கு மருந்தாசேர்ந்தருளே வேண்டுமையா போற்றி போற்றி

பிரணவஸ்வருபா பாவிநாசா பழவினைகள் களைந்தருளவேண்டுமையா
கருணைக்கடலே மோதகக்கையனே முக்கண்ணுடையோனே
சிவசக்கி ஞானானந்தம் அடியார்கள் ஆனந்தித்து அருள்பெற
வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகனே காப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

குருபாதம் துணை

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

நல்லூர் – யாழ்ப்பாணம்

அதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக

ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் அவர்களின்

# அருளாசிச் செய்தி

அன்புள்ளம் கொண்ட மெய்யடியார்கட்கு

தென்மராட்சி வரிவனம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தினால் வெளியீடு செய்யும் நூல் வரிசையில் இரண்டாவதுநூலக சிவசக்தி ஞானானந்தம் வெளியீடு செய்யப்படுகிறன்றது.

இன்றுள்ள சமுகத்திற்கு அருள் வழிபணியாற்றவேண்டிய பங்கு ஆலயங்களுக்கு இன்றியமையாத ஒரு அரும் பணி ஆகும். வழிகாட்டல்கள் ஆலோசனைகள் என்பது உள்ளத்தில் இருந்து ஆன்மீக சிந்தையுடன் வெளிவரவேண்டும். திரு. குமாரசாமி சுமுகலிங்கம் ஆசிரியராகப்பணியாற்றி வருகிறார் இவர்பல அரியநூல்களை சுவைத்து அதனுடாக சிறந்த கனிகளை மக்கள் சுவைக்க சிந்திக்க இறைவழி பயணிக்க வழிகாட்டி வருகின்றார். இச்செயல் விநாயகர் அருள்காரணமாக அமைகின்றது.அவரது வெளியீடுகள் அதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன புராணக்கருத்துக்கள் வழிபாட்டு பண்பாடுகள் விரதகால நெறிமுறைகள் இலகுவாக மக்கள் அறியச்செய்ய பல இறை அனுபமான உத்திகள் நூல்வடிவில் அருட்பொக்கிசங்களாக வெளியீடு செய்துள்ளார். இவர் இவற்றை தன்னலங்கருதாது ஆன்மீக சேவையாக செய்து வருவது இப்பகுதிமக்களின் அரும் பேறேயாகும் இப்பணி தொடர பேருதவிபுரியும் அனைவரும் போற்றபடவேண்டியவர்கள்.இவரது வெளியீடாக வரும் சிவசக்தி ஞானனந்தம் எல்லோரும் பெற்று அதன்வழி அருட்கடாட்சம் பெற்று நல்வாழ்வு வாழ நல்லாசி கூறிப்பிராத்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த தேசிக
ஞானசம்பந்த பரமாசர்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்
நல்லூர் - யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஓம் சக்தி

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் ஆதீனகுருக்கள் சிவஸ்ரீ சி. தம்பையாக்குருக்கள் வீரபத்திரக்குருக்கள அவர்களின்





## ஆசியுரை

வ்யாப்பதம் தயைநத் ஸகலம்
ப்ரஹ்மாண்டம் மனுஜேஸ்வர
மஹாகாவ்யா மஹாகாலே
மஹாமாரீ ஸ்வரூபயா
ஸைவ காலே மஹாமாரீ
ஸைவ ஸ்ருஷ்டிர் பவத்யஜா
ஸ்திதிம் கரோதி (பூதானம்)
ஸைவ காலே சநாதனீ
- தேவி மஹாத்மியம்
அத்தியாம்12 சுலோகம் 38,39

பிரளைய காலத்திதில் மகா சம்காரிணியாகத் தோண்றும் அந்த மகாகாளியால் பிரம்மாண்டம் முழுவதும் வியந்து விளங்குகிற்றாள் வியாபித்த காலத்தில் மகாமாரியாய் விளங்கும் அவளே பிறப்பற்ற அவளே சிருட்டியாக ஆகின்றாள் என ஸ்ரீமகாந்மீயம் கூறுகின்றது.அந்த சக்தி வழிபாட்டில் முத்து மாரியம்மன் வழிபாடு பற்றி கஞ்சிப் பெரியவர் இவ்வாறு எடுத்து இயம்புகின்றார்.

வாழ்க்கையில் இருக்கக்கூடிய எல்லாவித வியாதிகளையும் போக்க கூடியதும் அருள் பாலிப்பவள் மாரியம்பாள் சிவவழிபாடு பெருமாள் வழிபாடு செய்பவர்கள் கூட மகாமாரிம்மனை வழிபடடே ஆகவேண்டும் சக்திகளுக்கெலலாம் சக்தியாய்யிருப்பவள் பராசக்தி அந்த பரசக்தியின் அம்சமாக விளங்குபவள் மகாமரியம்மன். இவ்வகை சிறப்புமிக்க முத்து மாரியம்மமன் வழிபாட்டை 200 வருடங்கள் ஆகமுறைப்படியும் மரபு வழி முறைப்படியும் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கும் பழைமைவாய்த இவ் ஆலயத்தில் சமயம் சார்ந்த நூல் வெளியீட்டு வரிசையில் ஆசிரியர் சைவசித்தாந்த பண்டிதர் திரு கு. சுமுகலிங்கம் அவர்களால் தொகுத்து வெளியிடப்படஉள்ள சிவசக்தி ஞானனந்தம் என்னும் நூல் வெளியீடு செய்வதை அம்பாளின் அருள்உடன் பாரட்டுகின்றேன்.

இவ் ஆசிரியர் பல நூல்களை தொகுத்து வெளியீடு செய்து சைவசமய வளர்ச்சியில் தனக்கென ஒரு பதிவை ஏற்படுத்தி கொண்டார் இவரின் பணி தொடர என்னை வழிநடத்தும் முத்துமாரி அம்பாளை வேண்டுகின்றேன்.

மேலும் இவ்நூலில் கௌரிகாப்பு விரதம் தோற்றம் சிவநாமங்கள், சக்தி,சிவகவசங்கள், அபிராமி அந்தாதி போன்ற பல அம்சங்கள் உள்ளடக்கி வெளிவருகின்றது எனவே சைவசமயத்தில் பிறந்தநாம் அனைவரும் இவ் நூலின் உச்ச பயன்பாட்டை அடையவேண்டும்.

சிவம் சக்தி தன்னையின்றும் சக்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திருவுரும் புணர்ந்தில் குலருயிரெல்லா மீன்றும்

என அருணந்தி சிவாச்சாரியர் சக்தியின் பெருமைகளை கூறுகின்றார் நாமும் சக்தியை வழிபட்டு இவ் மானிடப்பிறவி எடுத்ததின் பயனை அடைவோமாக.

**எல்லோரும் இன்புற்று வாழ்க.**

சோதிடர்
சிவஸ்ரீ சி. தம்பையாக்குருக்கள். வீரபத்திரக்குருக்கள்
ஆதீனக் குருக்கள்
வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்த்துரை

தொன்மை வாய்ந்த இந்து சமயத்தின் தத்துவ உண்மைகளைத் தெளிவுற அறிந்து கொள்வதற்கு புராணங்கள், திருமுறைகள் போன்றன பெரிதும் உதவுகின்றன. அக்கருத்துக்கள் இளைய தலைமுறையினரிடம் சென்றடையச் செய்யும் வகையிலும் சைவநெறியின் அடிப்படையில் வாழவழிகாட்டும் முறையிலும் சைவப்பணிகளில் ஆர்வமாகச் செயற்பட:டு வரும் ஆசிரியர் சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் அவர்களின் பணி போற்றுதற்குரியது.

துன்பங்கள்,துயரங்கள் நிறைந்த இக்காலகட்டத்தில் மன அமைதி பெறஇறை வணக்கமே உதவும் அதனை ஊக்குவிப்பதில் புராணக்கதைகள் பெரும்பங்காற்றுகின்றன. அதனைஉணர்ந்து, புராணக்கதையின் ஒரு சிறுபகுதியினை மிகவும் தெளிவாக அனைவரும் அறிந்து கொள்ளும் நோக்குடன் சிவசக்தி ஞானானந்தம் என்னும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் சைவப்புலவர் கு. சுமுகலிங்கம் அவர்களின் இம்முயற்சியை நன்றியுடன் பாராட்டுகின்றேன் மேலும் இவரது சமயப்பணிகள் வளர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

உயர்திரு கு. சதாசிவமுர்த்தி
தலைவர்
சங்கத்தானை வைரவ கந்தசாமி கோவில்
பரிபாலனசபை
இளைப்பாறிய அதிபர்
பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# என்னுரை

சிவப்பணியாற்ற என்னை என்றும் வழிநடத்தி வரும் வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகன் திருத்தாழ்களில் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன் குலம்காத்து குணங்காத்து வரும் பூர்ணா புஸ்கலா உடனுறை துந்தியில் ஐயனார் ,முனியப்பர், வீரபத்திரர் வள்ளிதெய்வானை சமேத சிவசுப்பிமணியர் திருத்தாள் பணிந்து இப்பணிதொடர இறைஞ்சுகின்றேன்.

என்கண்கண்ட தெய்வங்களான மாதா,பிதா,சாயிகுரு, சற்குருகணேசாநத மகாதேவ சுவாமிகள் திருப்பாதங்களை வாழ்த்தி வணங்குகின்றேன்.

இந்நூலை அறப்பணியாக செய்ய வேண்டும் என்னும் பேரவாக் கொண்டவாகள் சிவபத்தை திருமதி சிவக்கொழுந்து சண்முகராசா(ராசாத்தி) திருமதி குணசிங்கம் கமலாதேவி அவர்கள். மனதில் ஏற்பட்ட ஆதங்கம் ஆலயங்களில் பக்திபூர்வமான நிலையை மக்கள் அடையவேண்டும். வழிகாட்டவேண்டும் அதற்கு தன்னுடைய சிவபணி மூலம் அனைவரும் உணரவேண்டும். அறிவியல் , ஆன்மிகப்பசிக்கு பரிகாரம் தேடும் செல்வங்கள் கல்விச் செல்வம், அருள் செல்வம் என உணர்ந்து அரும்பணியாகிய இப்பணியை ஆற்றியுள்ளார்கள். அவர்கள் குடும்பத்தினரின் சைவப்பணி மேலோங்கவும், இப்பணியை சிவப்பணியாக எற்று நிறைவேற்றும் பொதிகை 114 கணடி வீதி சாவகச்சேரி மகாலிங்கம் ஸ்ரீபாஸ்கரன் குடும்பத்தவர் அவர்கட்கும் ஒப்புநோக்கிய திருமதி சிவமங்கை சிவராசா ஆசிரியை அவர்கட்கும் வேழ முகன்பாதம் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

சிவசக்தி ஞானானந்ததம் மக்கள் காலை , மாலை பாரயணம் செய்து தம்மைப் பாதுகாத்து இறை ஞான உணர்வு பெற்று நல்வாழ்வு வாள வழிகாட்டும் பொக்கிசம் இதனை நாள் தோறும் பூசித்து பயன்பெற வேண்டும் என வேண்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பாதம் பணிந்து திருத்தாழ்களில் சமர்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டின் போது திருமுறைகள் பஞ்ச தோத்திரங்களாக அல்லது பன்னிரு திருறைப்பபாடலாக ஓதப்படவேண்டும் நேரம் அதிகமாயின் பின்வரும் பாடலை ஓதி துமலர் தூவி வாழிபாடுதல் சிறப்புடையதாகும்.

ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண் தாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே.

சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதா,
இந்துதர்மாசிரியர்
குமரசாமி சுமுகலிங்கம் ஜே.பி
தபாற் கந்தோர் வீதி
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ முத்துமாரித்தாயே சரணம்மம்மா

## சாவகச்சேரி வாரிவனம்
## ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
## தேவஸ்தானம்

### கோயில் அமைவிடம்.

சிவபூமியாம் இலங்கையின் சிரசுஎனக் கூறுப்படும் யாழ்ப்பாணத்தில் தானிய களஞ்சியம் தென்மராட்சியின் தலைநகரம் சாவகச்சேரியின் தென்பகுதியில் கோவில்பற்று சாவகச்சேரி இறை அரசோடு புளிவளவும் அம்படியான் புலத்தின்கண் தென்பகுதி இயற்கையின் பசுமையாம் மருதநிலமும் வடக்கே இனியஇளம் தெற்றலை வீசம் புளியஞ்சோலைகளும் சூழ்ந்த இடத்தில் ஞானம் அருளும் தெட்சணாமூர்த்தி தென்திசை நோக்கினால் போல் அருள் ஆட்சிபுரியும் அன்னையும் தென்திசை நோக்கி வீற்றிருக்கும் தலம் தான் சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.

### வாரிவனம் என பெயர்வரக்காரணம்.

சாவகச்சேரியை முன்னெரு காலத்தில் வாரிவனம் என அழைத்தார்கள் இதனால் இச்சக்தி ஆலயம் வாரிவனம் முத்துமாரி என்றும் சிவன், ஆலயம் வாரியப்பர் சிவன் கோயில் என்றும் போற்றப்படுகிறது. முன்னர் சாவகச்சேரி குழைக்காடு என வர்ணிக்கப்பட்டது. காரணம் நகரின் தென்பகுதி சோலையாக மரங்கள் காணப்பட்டது. இச் சோலைகளில் சாத்தாவாரி என்ற மூலிகைகள் கொடிகளாக படர்ந்து வனம் போல காட்சிஅளித்து். இதன் பொருட்டு வாரிவனம் என அழைக்கப்பட்டதாக முன்னோர்கள் விளக்கம் கூற கேட்கலாம்.

இலங்கையின் காலனித்துவ ஆட்சியில் போர்த்துக்கேயர் படையெடுப்பின் பின்னர் பல குடியேற்றங்கள் இடம்பெற்றன யாழ்ப்பாணராட்சியம் கைப்பற்றப்பட்டபோது இவர்களின் நிர்வாக சேவை மற்றும் இதர தேவைகளை பூர்த்தி செய்வதற்காக யாகவர் என்னும் இனமக்கள் குடியெற்றப்பட்டமையால் யாவகச்சேரி என அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் காலத்தின் ஓட்டம் யாகவ, சாவக என மருவி சாவகச்சேரி என அழைக்கப்படுகின்றது. இதனால் வாரிவனம் என்ற சொல் மறைந்துவிட்டது எனக் கூறலாம். எனினும் இன்றும் சக்தி ஆலயம் சிவன் ஆலயமும் பெயர் மாற்றம் இன்றி வாரிவனம் என்பதை சிறப்பு பெயராக வைத்தே ஆலய நாமம் போற்றப்படுவது பெருமைப்பட வேண்டிய அம்சம் ஆகும்.

மெய்யடியவர்கட்கு கல்வி. செல்வம், வீரம் ஆகியவற்றையும் வேண்டுவோருக்கு வேண்டியவற்யும் வாரிவாரிவளங்கும் அட்சயபாத்திர நாயகியாக விளங்கி வனம்போல் பரந்த எல்லை அற்ற அன்பர் கூட்டத்தை ஆட்கொண்டு தனது அருள் பார்வையால் காத்து அருள் பொலியும் முத்துமாரி அம்பாளும் நீர்வழி தடாகங்களின் நீரினை வாரிவாரி வழங்கியும் அருளை வாரிவாரிவழங்கும் வாரியப்பர் உறையும் இடமாக இருப்பதால் வாரிவனம் என அழைக்கப்படுகின்றது. இவ்வாறும் பொருள் கொள்ள முடியும்.

## கோயிலின் தொன்மை

சிவாலயங்களுக்கு அருகில் சக்தி ஆலயம் உருவாக்கப்பட்ட காலம் சோழமன்னர் காலம் என அனுமானிக்கப்படுவாதால் வாரிவனேஸ்வரர் சிவாலயம் சோழர் மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்டது எனலாம். இவ் ஆலயமும் இக் காலத்தில் சிவன் ஆலயத்தின் பரிவாரமூர்த்தியாக தோன்றி இருக்கலாம் என நம்பப்படுகிறது. முன்னர் சிவன் ஆலயம் மூன்று வீதிகளை கொண்ட பிரமாண்டமான ஆலயமாக விளங்கி இருக்கின்றது. தற்போது சாவகச்சேரி நகரின் பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் காணப்புடும் கிணறு சிவன் ஆலயத்தின் தீர்த்த கிணறாக அமைந்துள்ளது என மூதாதையர் கூறுவர். கிராமியத் தெய்வமாக விளங்கும் முத்துமாரி, எல்லையம்மாள், சுடலையம்மாள், கண்ணகை, திரௌபதி, சீதை போன்ற தெய்வங்களிற்கு பக்தி மார்க்கமாக கிராமிய வழிபாட்டுமுறையாக. சூலம் அல்லத உருவ விக்கிரகங்கள் போன்றவற்றை சின்னமாக வைத்து பொங்கல்,படையல், குளிர்த்தி அபிஷேகம், பலி , வேள்வி சாமி உரு ஆடல் போன்ற வழிபாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை ஆலயத்திற்கு புறம்பாக மக்கள் விரும்பி ஆற்றிவந்தனர் அவ்வாறே இவ் ஆலயத்திற்கு தோற்றம் பெற்றிருக்கவேண்டும். இன்றும் கூட பல சிவலயங்களுக்கு அருகில் மாரியம்மன் ஆலயமும் காணப்படுகின்றது. திருநெல்வேலியிலும் வல்வெட்டித்துறையிலும் சிவன் ஆலயமும் மாரியம்மன் ஆலயமும் அருகில் காணப்படுகிறது. அவ்வறே இவ்வாலயமும் சாவகச்சேரி சிவன் ஆலயத்திற்கு அருகில் காணப்படுவது குறிபிடத்தக்கது.

பேர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றியதோடு இங்கு தமது மதத்தைபரப்புவதில் ஆர்ாவம் காட்டினர் இதன் உச்சகட்டநடவடிக்கையாக சுதேச மதமாக மிளிர்ந்த சைவசமயங்கள் வளர்சியை தடுப்பதற்கு ஆலயங்களை இடித்து மண்ணுடன் மண்ணாக்கியும் இக் கற்களை கொண்டு தமது பாதுகாப்பு கோட்டைகளையும் உருவாக்கியது வரலாறு. சைவசமயத்தவர்கள் இறைநம்பிக்கையின் பொருட்டும் தாம் வழிபட்டுவந்த விக்கிரங்களை மறைவான இடத்திலும் மரத்தடிகளிலும் குழி தோண்டி மறைத்து வைத்து அவ்விடத்தில் மனத்தில் நினைத்து வழிபட்டனர் அவ்வாறே இவ் ஆலய வழிபாடடு சினனம் மறைக்கப்பட்டிருக்கலாம்.

## கோவில் வரலாறு.

தற்போது அம்பாளின் புலத்தில் அவ்வூர் வேலுப்பிள்ளை என்பவரால் புளியமரத்தின் அடியில் ஒர்உருவ சினன்ம் கண் எடுக்கப்பட்டதாகவும் அச்சினனம் அதே இடத்தில் வைத்து வழிபாடு ஆற்றிவந்ததாகவும் கூறப்படுகிறது. இக்காலம் 1800 என அவர் தம் வம்சாவழியினர் மூலம் அறிய கூடியதாக உள்ளது இதற்கு உறுதிபாடாக இவ்வாயத்தின் பயன்படுத்தப்படும் குத்துவிளக்கில் தமிழ் இலக்கத்தினால் 1800 என பொறிக்கப்பட்ட விளக்கு ஆலயத்தில் காணப்படுகிறது. இவ் ஆலயம் ஓர் சிறிய கொட்டகை அமைத்து மக்கள் வழிபாடு செய்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் இவ் ஊர் திரு கா. வைரவநாதர். திரு வேலுப்பிள்ளை, சிவஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயர் , கௌரிப்பிள்ளை, ஊர்மக்கள் என்பவர்களின் கூட்டு முயற்சியால் இந்தியாவில் இருந்து விக்கிரம் வரவழைக்கப்பட்டு சுண்ணாம்புகற்களாலும் செங்கற்களாலும் கோவில் அமைக்கப்பட்டது . இத் தர்ம் விக்கிரகம் அகன்ற முகமும் வாள், காபலம்,உடுக்கை,பாசம் ஆகியவற்றை ஏந்திய நான்கு கரமும் தீக் கொழுந்து போன்ற சடாமுடியும் உடைய் நின்ற திரு உருவம் ஆகும். முன்னர் வழிபட்டசின்னம் தற்போதைய பிடத்திற்கு அடியில் சமாதியாக வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரிகைகளை செய்வதற்காகவும் ஆலய பராமரிப்புக்களை மேற்கொள்வதற்காக ஆதி சைவ பரம்பரையை சேர்ந்த சிவஸ்ரீ சின்னத்தம்பிக்குருக்கள் பொறுப்பு ஏற்றார்.

## ஆலயம் மாற்றம் முயற்ச்சி

1890ம் ஆண்டு தற்பொது சிவன் தீர்த்த குளத்திற்கு அருகில் பல வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான கோவில் ஒன்று திரு வே. கனகசபை என்பவரால் முன்நின்று கட்டப்பட்டது. இக்கட்டட வேலைகள் 1890 ஆண்டு பூர்த்தி எய்தியது.இது வரை காலமும் அம்பாள் எழுந்தருளிய இடத்தை விட்டு நகர மறுத்து அம்பாள் ஆலயக்குருவிற்கும் அடியவர் ஒருவருக்கும் தனது சமாதியையும் தலவிருட்ச அடியையும் மாற்றும் முயற்ச்சியை கைவிடுமாறு அருள்வாக்கு சொன்னார். இதை இருவரும் எடுத்தியம்பின் எனினும் அமைக்கப்பட்ட கட்டிடம் அழிந்து போவதை கண்ட திரு வே. கனகசபை அவர்கள் அம்பாளை மாற்றும் முயற்சியை தீவிரப்படுத்தினார் அம்பாளின் தீர்ப்பை உதாசீனம் செய்யப்பட்டதின் விளைவு 1910 ம் ஆணடு ஒரு வகையான கொள்ளை நோய் பரவியது நகரத்தில் உள்ள பலருக்கு இந்த நோய் ஏற்பட்டு சுமார் 100 இற்கு மேற்பட்டவர்கள் இறக்க நேரிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலம் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் இவர்கள் பல தடுபபு மருந்துகளை கொடுத்தும் பயன் எதுவும் அளிக்கவில்லை அவர் தம்குடும்பதினர் சிலரும் இந் நோயினால் இறக்க நேரிட்டது இதன் பொருட்டு கோயில் மாற்றும் முயற்சியை கைவிட்டு அவரும் ஒதுங்கிக்கொண்டார்.

## ஆலய ஆரம்ப கட்டவளர்ச்சி

1920 ம் ஆண்டு அம்பாளின் இருப்பிடத்திலேயே கோயில்கட்டுவதற்கு ஆலய சுற்றாடலைச் சேர்ந்தவரும் ஆலய நடவடிக்கையில் முன்நின்று செயற்பட்டவராகிய திருமதி மு் கௌரிப்பிள்ளையின் கணவர் திரு. முருகேசு என்பவர் முன்வந்தார் .சைவ மக்களின் உதவியுடன் ஆலயம் உள்ள இடத்திலே அம்பாளின் இருப்பிடத்தில் எதுவித மாற்றம் செய்யப்படாமல் கோயில் அமைத்து மகாகும்பாவிசேகம் செய்யப்பட்டது.

## ஆலய பூசை முறைகள்

இவ் ஆலயத்தில் சைவக்குருமார் பரம்பரையினரே ஆதி தொடக்கம் இன்று வரை நித்திய நைமித்திய கிரிகைகளை ஊர்மக்களின் உதவியுடன் நடாத்தி வரகின்றார்கள் ஆகமமுறைப்படி யும் மரபுவழிமுறைப்படியும் அம்பாளுக்கு பூசை முறைகள் நடாத்தப்பட்டு வருகின்றது. பழைய காலத்தில் இருந்தே நண்பகல 12.00 மணி பூசை முறை வழக்கத்தில் உள்ளதாக அறியப்படுகிறது. விசேடதினங்களில் காலையில் இருந்து பூசை ஆரம்பமாகிநடைபெறும்

## .மரபுவழி வழிபாட்டுமுறை

வைகாசி விசாக குளிர்ச்சி பொங்கல் சிறப்பாக நடைபெறுவது உண்டு பண்டங்கள் சேகரிக்கப்பட்டு வழந்துநேர்ந்து பொங்கி படையல் படைத்து பறைமுழங்க,உடுக்கை ஒலிக்க அம்பாளினை வழிபடும் முறை பக்திமார்க்மாக நடைபெறும்.

பினனர் ஆலயக்குருக்களினால் பிரம்பும் வேப்பமிலையுமாக அப்பாளின் அருள் நீர் தெளித்து அடியார்கள் துயர் அகல வழிவெட்டி வழிஅமைத்து கொடுக்கும் நிகழ்வு விசேடமாக வருடந்தோறும் நடத்தப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் நிறைவடைந்து எட்டாம் மடை நிகழ்வு காத்தவராயருக்கு விசேடவழிபாடு நடைபெறும், வடைமாலை சாத்தியும் நீர்கஞ்சி படைத்தும் தமது நேர்த்திகளை நிறைவு செய்வர்.

காத்தவராயரின் சிந்து நடைக்கூத்து நடித்துக்காட்டும் நிகழ்வும் இடம்பெறுகின்றது.

விசேட தினங்களில் ஆகம வழிபாட்டுமுறை ஆராதனைகள் அர்ானைகள் தேவாரபராயணம் திருவிழாக்கள் என்பன இடம்பெறும். பங்குனித்திங்கள் தொடக்கம் வைகாசி விசாகம் வரை பிரதி திங்கள் தோறும் விசேட பூசை அபிஷேசகம் என்பன சிறப்பாக நடைபெறும் ,பிரதி பௌர்னமி தோறும் திருவாசகமுற்றோதல் பிரதி அமாவாசை தோறும் அபிராமி அந்தாதி ஓதுதல் என்பன இடம்பெறும். நவராத்திரி, தைப்பூசம், மாசிமகம், கேதாரகௌரிவிரதம், திருவெம்பாவை என்பன விசேடமாக அனுட்டிக்கப்படுகின்றன.

நவராத்திரி காலத்தில் அம்பாள் கொலு இருந்து விஜயதசமி அன்று அம்பாள் வீதி உலாவந்து (வாழைவெட்டும்) மானம்பூ விழா சிறப்பாக முன்எடுக்கப்படுகின்றது. வருடப்பிறப்பு அன்று அம்பாள் சித்திரத்தேரில் வலம் வரும் நிகழ்வு கண்கொள்ளா காட்சியாக அமையும். ஆடிப்பூர விழா அன்று அம்பாளின் ருதுசாந்தி நிகழ்வும் திருவுஞ்சல் என்பன இடம்பெற்று அம்பாள் சித்திரத்தேரில் வரும் காட்சி இடம்பெறும்.பங்குனி உத்திரம் அன்று சசக்தி ஒமம் சிறப்பாக நடைபெறுவது உண்டு

## காத்தவராயர் வழிபாடு.

ஆலய மண்டபத்தில் காத்தவராயரைக்குறிக்கும் கழுகு மரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அடியார்கள் காத்தான் என அழைத்து வழிபடுவார்கள். நித்திய பூசைகளும் நடைபெறுகின்றது. புராணக்கதைகளின் வழியே நோக்கும் போது காத்தவராயர் முத்துமாரி அம்பாளின் மகன் என்றும் கூறப்படுகிறது.

காத்தவராயர் கிராமிய காவல் தெய்வமாக காட்டபடுகின்றார். வைரவர், ,முனியப்பர் கிராமிய காவல் தெய்வமாக வழிபடுவதை போல் கழுகு மரத்தை காத்தவராயராக நினைத்த வடைமாலை சாத்தியும் பொங்கல் படைத்தும் வழிபடுவது உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கழுகுமரம் வழிபடும் முறை பொதுவாக மாரியம்பாள் கோயிலகளில் காணப்படுகிறது. இவ்வழிபாட்டு முறை இவ் ஆலயத்தில் பின்பற்றப்படுவது மிக விசேட அம்சமாகும்.

**ஆலயபரிமான வளர்ச்சி.**

1965 இல் ஆலயமுகப்பில் பொதுமண்டபம் (முன்னர்) திரு.செல்லதம்பி

1966 இல. மணிக்கூட்டு கோபுரம் (முன்னர்) திருமதி. அன்னபூரணம்
மடப்பள்ளி (முன்னர்) திரு .அண்ணாமலை
ஆலயஉட்புறத்தே அமையபெற்ற அன்னதானமடம் (முன்னர்) திரு. சரவணமுத்து.
வாயிலுக்கு அண்மையில் அமைந்த கொட்டகை (முன்னர்) திருமதி .வை. பூமணி
1990 ஆண்டு சித்திரத்தேர் திருமதி நாகெஸ்வரி
தேர்முட்டி(முன்னர்) திரு கணேசு.
1994 கிழக்குபக்கமுள்ள கொட்டகை (முன்னர்) திரு சுப்பிரமணியம்.

1998. ஆம் அண்டு ச. துரைச்சாமி என்பவரின் முயற்சியில் ஊரில்நிதி சேகரித்தும் தனது பங்களிப்பின் மூலமும் பழைய மகாமண்டபம் தரிசனமண்டபம் என்பவற்றை வைரக்கல் கொண்டு அமைக்கப்பட்டது. இவ் ஆண்டே குடமுழுக்கும் இடம்பெற்றது.

பலஅடியார்கள் பல நேர்த்திகளை வைத்து பலவகையயான திருப்பணிகளை செய்துள்ளார்கள்.

அவ்வகையில் வாகனங்கள்,எழுந்தருளிவிக்கிரகங்கள்,தளபாடங்கள், கோயில்பூசை உபகரணங்கள்,திருத்தவேலைகள்,வர்ணப்பூச்சுக்கள் கிணறுஅமைத்தல், செப்பனிடல் அடங்கும். திரு மு. பரமநாதன் காலத்தில் கோயில் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ம் ஆண்டு இடப்பெயர்வின் போது ஆலயத்திற்கு சிறு சேதங்கள் ஏற்பட்டன.2002 ம் ஆண்டு மீள குடி அமர்ந்தபோது திரு வை. சிவராசவினதும் ஆலயகுருவினதும் ஆலய அடியார்களினதும் ஒத்தாசையுடன் செப்பனிடப்பட்டு ஆலய பூசைகள் சிறப்பாக நடைபெற்றவண்ணம் உள்ளது.

**ஆலய கும்பாபிஷேகமும் ஆலய குருவின் வழித்தோன்றலும்.**

1890 ம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட ஆலயகும்பாபிசேகம் சிவஸ்ரீ சின்னத்தம்பிக்குருக்கள் அவர்களால் நடத்தப்பட்டது. இக் குரு பொறுப்பு ஏற்றபின்னர் தனது வயோதிப நிலை காரணமாக தனது பொறுப்புக்களை முத்த புதல்வர் சிவஸ்ரீ சின்னையாக்குருக்களிடம் கையளித்தார். இவர் காலத்தில் ஆலயம் புனரமைக்கப்பட்டு அவ் ஆண்டே கும்பாபிஷேகம் இக் குருவினால் செய்யப்பட்டது. பின்னர் இளைய புதல்வர் ஆயுள்வேத வைத்தியர் சிவஸ்ரீ தம்பையாக்குருக்கள் பொறுப்பு ஏற்றார் 1925 ஆம் ஆண்டு தொடக்கம் ஆலயம் பல முன்றேற்றம் கண்டது. 1967 ஆண்டு புனருத்தாண மகாகும் பாபிஷேகம் இக் குருவினால் செய்யப்பட்டது.1979 ம் ஆண்டு சிவபதம் அடைய அவருடைய புதல்வர் சோதிடர் சிவஸ்ரீ வீரபத்திரக்குருக்கள் பொறுப்புக்களை ஏற்றார்.

1998 ஆம் ஆண்டு திருப்பணி முடிவில் அவ் ஆண்டே குருவினால் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக்குரு இன்றுவரை தனது பணியை ஆற்றி வருகின்றார்.

**ஆலயமும் சமூகமும்**

இவ் ஆலயப்பெயரில் அற நெறிபப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சைவமாணவர்களை வழிநடத்தி வரப்படுகின்றது. முன்னர் ஆசிரியர் தனபாலசிங்கம் அவர்களும் பின்னர் ஆசிரியர் புவன்ஸ்ரீந்திரன் அவர்களாலும் ஆசிரியை தேவமனோகரி அவர்களாலும் சேவை மனம்கொண்ட ஆசிரியர்களாலும் நடாத்தப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைமட்ட சமய அறிவுப்போட்டிகள் நடத்துதல் சமூக,சமய பெரியார்களின் சேவை நலன் பாராட்டுதல் போன்ற சமூக சேவைகளையும் ஆற்றி வருகின்றது.

## தற்போதய நிலையில்.

அம்பாளின் திருஅருள் காரணமாக பல திருப்பணி வேலைகள் இராசகோபுரம், சுற்றுக்கொட்டகை, பரிவார மூர்த்திகள் போன்ற பணிகளை திரு.வை சிவராசா பொறுப்பில் நடைபெற்று வருகின்றது.

## முடிவு.

இவ் ஆலயம் ஒவ்வோர் காலத்திற்குஏற்ப ஒவ்வொரு அடியார்கள் மூலம் திருப்பணிகள், செய்வித்தலும் பல அடியார்களின் குறைகளை நீக்கி அற்புதங்கள் செய்த அம்மன் அதே நேரம் தீங்கு விளைவிக்கும் அன்பர்களை சோதனைக்கு உட்படுத்தி அவர்களின் அறியாமையை நீக்கி அருள்புரிந்த அகில லோக நாயகி அன்னை முத்துமாரியின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகும். நாமும் இவ் முத்துமாரி அம்பாளை வழிபட்டு இன் அருள் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காப்பு

**காரணைய கூந்தற் கவுரியியற்றியகே**
**தாரவிரதகதை யான்படிக்கச் - சீருலகும்**
**ஐந் துகரத்தந்தி முகத் தண்ணலடியர்க்கருளும்**
**கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு.**

ஶ்ரீ சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளாகிய சௌநகாதி மஹாரிஷிகளை நோக்கி அடியிற்கண்ட விதம் சொல்லத் தொடங்கினார். ஓ இருஷி சிரேஷ்டர்களே! உங்களுக்கு அனேக புராணேதிகாச கதைகள் சொன்னேன். இன்னுமொரு கதை சொல்கிறேன் கேளுங்கள் இந்த சராசர ரத்மகமான பிரபஞ்சகர்த்தாவாகிய அந்த உமாமகேஸ்வரரைக் குறித்து நமஸ்கரித்து சகல கல்யாண குணங்களுக்கும் காரணப் பூதமாகிய கேதாரவிரத மகத்துவத்தை எடுத்துச் சொல்கிறேன் கேளுங்கள.

உலகத்தில் மனுஷ்ய கோடிகளுக்கு சகலமான ஐஸ்வரியத்தை கொடுக்கக்கூடியதும் அதன் மூலமாய் இகபரசுகங்களை அடையக்கூடியதுமான லோகமாதாவாகிய உமைபார்வதியால் அனுஸ்டித்துச் செய்து சங்கரதேகார்த்தவெனும் பரம சிவானுக்கிரகத்தால், அர்த்த நாரீஸ்வரி என்று பேர் பெற்றதான கேதாரீஸ்வர விரதமென ஒன்றுண்டு.

இவ்விரதத்தை (21) இருபத்தொரு தடவை செய்யும் புண்ணியவான்களுக்கு இம்மையில் ஐஸ்வரிய சுகமடைந்து மறுமையில் சிவசாயுஜ்யம் அடைவார்கள் என்பது திண்ணம். ஆகையால் இதை பிராமணாதி நான்கு வர்ணத்தவர்களும் செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோ முனிவர்களே இப்பூலோகத்தில் ஈசான்யப்பாகத்தில் மின்னர்க்கொடிக் கூட்டங்களால் நிறைந்ததும் சரத்கால மேகங்களுக்கொப்பாகியதும் அனேக நவரத்தின மணிமயமான கோபுர சிகரங்களாலும் பலவித உத்யான வனங்களாலும் அதில் புஷ்பப்பலாதி விசேசங்களாலும் பசுபஷிமிருகாதிகளாலும், மலையருவிகளாலும், சூழப்பட்டும் தேவதா விருஷங்களாலும் மணமுள்ள புஷ்பச் செடிகளாலும் கூடி பிரகாசிக்கின்ற உத்யான வனங்களின் மத்தியில் விளங்கா நின்றும் ஸர்வ பிராணிகளாலும் சேவித்து புகழ்ந்து பேசும்படியான மிகமங்களப்தமான கைலை என்று விளங்கும் ஒரு பர்வத சிரேஷ்டம் ஒண்றுண்டு.

அதில் மஹான்களும், யோகிகளும், சித்தர், கின்னரர், கிம்புருஷர், தேவர், காந்தர்வர்களால் சேவிக்கும் படியான இப்பர்வதசிரகத்தில், சற்குண ஐஸ்வரிய சம்பன்னரான ஜகத் கர்த்தாவாகிய பரமேஸ்வரர் உமா சமேதராய் பரமத்த கணங்களாலும் இன்னும் இந்திராதி தேவர்களாலும் இருஷி முனிக் கூட்டங்களாலும் சூழப்பட்டு விழங்கும்படியான காலத்தில் பஞ்ச பூதங்களாலும் சூர்யாதி நவக்கிரகங்ளாலும் நச்சத்திர ராசிகளாலும் வசிட்டாதி மஹரிஷிகளாலும் ப்ராம்ஹி முதலிய ஸப்தமாதர்களாலும் கணபதியும், தேவஸேனாதிபதியும் அரம்பை முதலிய தேவஸ்திரீகளும் சிவசாயுஜ்யமடைந்திருக்கும் அநேக தேவருஷி கூட்டங்களாலும் சேவித்து பணிவிடை செய்கிறவர்களின் மத்தியில் பவானி சமேதராய் எழுந்தருளியிருக்கும் படியான பரமசிவன், தன் பத்தகோடிகள் சுலபமாய் தங்களை தரிசிக்கும் பொருட்டு ஒரு தேவசபை ஏற்படுத்தி சிவபெருமான் உத்தரவின் படி நாரதாதி தேவர்களால் மனோக்கியமாய் தேவவாத்திய விசேஷங்களால் கானம் நடத்தும்போது கிருதாசி மேனகை முதலியோர்கள் வீணாதி தாள விசேசங்களுடன் நான்குவித வாத்தியங்ளோடும் நாட்டியம் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது நடன ஸ்திரீகளிள் மிக சௌந்தர்ய முள்ளவளாகிய எல்லோருடைய மனத்தைக் கவரக்கூடிய ரம்பையானவள் அநேகமான நாட்டிய விசேசங்களை நடித்துக் காட்டினாள். உடனே அந்தரங்கபக்தராகிய பிருங்கி மஹரிஸி சிவ சன்னிதானத்தில் பக்தியோடுவிசித்திரமான விகட நாட்டியம் செய்தார். அப்போது பரமசிவனுடைய இடப் பாகத்தில் பார்வதியும் எழுந்தருளியிருந்தாள். எல்லா தேவர்களும் அந்த பிருங்கியால் செய்யப்பட்ட நாட்டியங்களுக்கு மிக சந்தோஷித்து நகைத்து மிக ஆச்சரியம் அடைந்தார்கள். அந்த ஆனந்தமான சிரிப்பினால் பர்வத குகைகள் நிறைந்து விசேசமான கலகல தொணி உண்டாகியது. அப்போது பரமசிவத்திற்கு உண்டான மனக்களிப்பால் அச்சிவபத்தனாகிய பிருங்கியைப் பார்த்து. உன்னால் நடத்தியநாட்டியவிசேசத்தால் எனக்கு மிக சந்தோஷமுண்டாகிறதென்று பரமசிவன் சொல்லி அந்தப் பக்தரிடம் மிகக் கிருபை உண்டாக்கி அனுக்கிரகம் செய்தார். அப்போது சபையிலுள்ள கவிபுத்தான் முதலியவர்கள் அவரை மிக கௌரவப்படுத்தினார்கள். அம்மஹரிசி மிகபக்தியோடு அதிவணக்கத்துடன் சந்தோஷமாய் பார்வதியை நீக்கி பரமசிவத்திற்கு மாத்திரம் வலம் சுத்திவந்து நமஸ்காரம் செய்தார் உடனே மிகபுஜ்யையான பார்வதிதேவி புன்சிரிப்போடு தன்பர்த்தாவாகிய பரமசிவத்தை கண்ணோக்கி பார்த்து ஓ சுவாமி! இந்தப்பக்தன் என்னை விட்டுத்தங்களுக்கு மட்டும் நமஸ்கரித்தானே: அதற்கு என்ன காரணமோ? அந்த ஆச்சரியமான விஷயத்தை எனக்கு விவரித்துச் சொல்லவேண்டும் என்று கேட்க.

சந்திரசூடா ஓபிரியே! சொல்கிறேன் கேள் சிவயோகியாகிய பரமார்த்தா பேஷியை கோரினவனாகையால் உன்னால் எவ்விதமான பிரயோசனமும் கிடையாதென்கின்ற நிச்சயமானதுடன் என்னை மாத்திரம் நமஸ்கரித்தான் . என்று பரமசிவன் சொல்ல உடனே பரமேஸ்வரி மிக வருத்தப்பட்டு தன்பர்த்தா விடத்தில் கோபங்கொண்டு, தமது சக்தியின் கூறு பிருங்கி இருஷியினின்றும் அகலக்கடவது எனச்சொல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உதிரம் பிளிந்து சக்கைபோன்ற உடல் உடையவராய் பாலையில் அகப்பட்ட இலை போன்று தள்ளாடினார். இதனைக் கண்டு கருணை கொண்ட கைலைவாசன் அவ் இருஸியின் கையில் தண்டொன்று வரச்செய்ய. அவர் அதன் உதவியால் ஊன்றிக்கொண்டே தமது ஆச்சிரமம் போய்ச்சேர்ந்தார், நம்மை இவ்விதம் இகழ்ந்து நின்ற பிருங்கி மகரிசிக்கு பெருமான் கோலுங் கொடுத்தனுப்பியதைக் கண்ட உமாதேவியார் மிக்கசினங்கொண்டு கைலையைவிடட்கன்று அருந்தவஞ்செய்யக்கருதி, பூலோகத்திற்கு எழுந்தருளி வால்மீக மகரிசி சஞ்சரிக்கின்ற பூங்காவனத்தில் ஓர் விருச்சத்தினடியில் அமர்ந்தார்.

அந்தத்திக்கில் பன்னிரண்டு வருஷம் மழையில்லாமல் இருந்த விருச்சங்கள் எல்லாம் துளிர்த்து தளைத்து,புஷ்பித்து காய்த்து, பழுத்து இன்னும் அனேக பூஞ்செடிகள் எல்லாம் மல்லிகை,முல்லை, கொங்கு, இருவாச்சி, மந்தாரை, பாரிஜாதம், சணபகம்,சிறுமல்லிகை, புன்னை, பாதிரி,வில்வம், பத்திரி, துளபம், மற்றும் உண்டான சகலஜாதி புஷ்பங்களும் புஷ்பித்து பரிமளித்து, சுத்தி நாலுயோசனை விஸ்தீரணம் பரிமளம் வீசினது. அச்சமயத்தில்வால்மீக மகரிசி தம்முடைய பூங்காவனத்தைப் பார்த்து அதிசயத்து பன்னிரன்டு வருஸம் மழையில்லாமல் உலர்ந்திருக்கின்ற விருட்சங்கள் எல்லாம் இப்பொழுது ஆச்சரியமாய்த் துளிர்த்து, புஷ்பித்து, காய்த்து, பழுத்திருக்கின்ற ஆச்சரியம் என்னவோ தெரியவில்லை என்று மனதில் நினைத்துக் கொண்டு பூங்காவனத்திற்கு வந்தார். வந்தவுடன் சகல புவன கர்த்தாவாகிய பரமேஸ்வரர் பரமேஸ்வரி, பிரம்மா விஷ்ணு வந்திருக்கிறார்களோ. அவர்களைக் காண வேண்டுமென்று அந்த வனமெல்லாம் தேடி ஆராய்ந்து பார்க்குமிடத்தில் ஸ்ரீ பார்வதா தேவி அம்மன் ஒரு வில்வ விருட்சத்தின் அடியில் எழுந்தருளி இருக்கிறதைக் கண்டு மூவருக்கும் முதன்மையான தாயே முப்பது முக்கோடி தேவர்களுக்கும் நாற்பத்தெண்ணாயிரம் ரிசிகளுக்கும் ஒரு தெய்வமாய் நின்ற பராசக்தியான ஈஸ்வரியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எத்தனை கோடி தவம் செய்தேனோ. இந்த பூங்காவனத்தில் எனக்கு காட்சி கொடுக்கத்தக்கதாக கைலாயத்தைவிட்டு இந்தப் பூலோகத்திற்கு நீர் எழுந்தருளின என்னவென்று திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று வால்மீக மகரிசி கேட்க அப்பொழுது இமாசல குமாரியாகிய பார்வதியம்மன் திருவாய் மலர்ந்து சொல்லுகின்றார்.

கேளும் வால்மீக மகரிசியே! ஸ்ரீ கைலாயத்தில பரமேஸ்வரரும் நாமும் ஒரு நவரெத்தினச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் பிரம்மா,விஸ்ணு தேவேந்திரன் முதலான தேவர்களும் மற்றும் உண்டான மகரிசிகளும் வந்து இருவரையும் சாஸ்டாங்கமாக நமஸ்கரித்துப் போவார்கள் ஒருநாள் பிருங்கி மகரிசி வந்து பரமேஸ்வரரை மாத்திரம் நமஸ்கரித்து நம்மை புறம்பாக தள்ளினான் . அப்பொழுது நம்மை இவனோ புறம்பாக தள்ளுகிறவன் என்று மகா கோபத்துடன் நம்முடைய கூறான இரத்தமாங்கிசத்தை வாங்கிக் கொண்டேன். அப்பொழுது பரமேஸ்வரர் அவனுக்கு உபேட்சை செய்து ஒரு தெண்டு கொடுத்தார். இப்படிச் செய்யலாமா என்று கேட்டதற்கு அவர் மறுமொழி சொல்லவில்லை ஆகையால் நமக்கு கோபம் பிறந்தது.

பூலோகத்திற்கு வருகிறபொழுது இந்தப் பூங்கா வனத்தைக் கண்டு இங்கே இருந்தோமென்று பார்வதி அம்மன் வால்மீக மகரிசிக்கு சொல்ல அந்த மகரிசியும் தாயே நீங்கள் என்னுடைய ஆச்சிரமத்திற்கு எழுந்தருளி வரவேண்டுமென்று நமஸ்கரித்தார். அப்படியே நல்லதென்று பரமேஸ்வரியும் வால்மீக மகரிசியுடைய ஆச்சிரமத்திற்கு வர ரிசியானவர் பார்வதி தேவியாருக்கு ஒரு ஆச்சிரமமும் ஒரு நவரத்தின சிம்மாசனமும் உண்டுபண்ணி அந்த நவரெத்தின சிம்மாசனத்தின் மீது அமரும்படி பரமேஸ்வரியை வேண்ட பரமேஸ்வரி மகரிசியைப் பார்த்து ஓ மகரிசியே, இந்தப் பூலோகத்தில் நான் ஒரு விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான விரதம் ஒன்று இருக்குமானால் அதை எனக்கு நீர் சொல்ல வேண்டுமென்று கேட்க. வால்மீக மகரிசிதொழுது தோத்தரித்து என் தாயே லோக மாதாவே, அபிராமித் தாயே திரிபுரசம்மாரி, சிவகாமி, கௌரி, கைலாசவாசகி விபூதிருத்திராட்சி, கிருபாநந்தி, வேதஸ்சொரூபி, உமமுடைய பாதத்திற்கு அடிமையாகிய அடியேன் ஒரு விண்ணப்பம் சொல்கிறேன் கோபமில்லாமல் கேட்டு திருவுளம் செய்ய வேண்டுமென்று கேட்க, அது என்ன வென்று ஈஸ்வரி கேட்க கேளாய் ஈஸ்வரியே! இந்தப் பூலோகத்தில் ஒருவருக்கும் தெரியப்படாத ஒரு விரதம் உண்டு அவ் விரதத்திற்கு கேதார ஈஸ்வரி நோன்பென்று பெயர்.

அதை இதுவரையில் யாரும் அனுஷ்டிக்கவில்லை நீர் அந்த விரதத்தை அனுட்டித்தால் இஷ்ட சித்தியாகும் என்று சொன்னார் அதை பரமேஸ்வரி கேட்டு அந்த விரதம் எக்ககாலத்தில் எவ்விதமாக அனுஷ்டிக்கின்றது எனக்கு நன்றாய் நீர் தெரியப்படச் சொல்ல வேண்டு மென்று கேட்க வால்மீக மகரிசி சொல்லுகிறார்.

புரட்டாதி மாதச் சுக்கில படச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண படசம் தீபாவளி அமாவாசை வரைக்கும் இருபத்தொரு நாள் பிரதி தினம் ஸ்நானம் செய்து பரிசுத்த வஸ்திரம் தரித்துக் கொண்டு ஆலவிருச்சத்தினடியில் மணலினால் சிவலிங்கம் பிடித்து வைத்து ஈஸ்வாராகப் பாவித்து அபிசேகம் செய்து வீபூதி சந்தணாட்சதை, புஷ்பம் சாத்தி தூபதீப நைவேத்தியம் செய்து ஒரு வெல்ல உருண்டை,ஒரு சந்தண உருண்டை, ஒரு மஞ்சள் உருண்டை, ஒரு அதிரசம், ஒரு வாழைப்பழம், ஒரு தேங்காய், ஒரு பாக்கு, ஒரு வெற்றிலை. இவைகளையெல்லாம் நேமகமாய் வைத்து நைவேத்தியம் செய்து தூபதீபங் கொடுத்து சுகந்த வில்வார்ச்சனை அர்ச்சித்து நமஸ்காரம் செய்து அதன் பின் ஒரு கயிறு இருபத்தோர் இழை முறுக்கி அதை தினம் தினமும் ஒருமுடியாக இருபத்தொரு முடி முடிந்து தினமும் உபவாசமாக இருந்து நைவேத்தியம் செய்த அதிரசத்தைப் புசித்து இந்தப்படிக்கு இருபத்தொருநாளும் கிரமமாக இந்த விரதத்தை அனுஷ்டித்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தோராம் நாள் தீபாவளி அமாவாசை அன்றைக்கு பரமேஸ்வரர் ரிஷபவாகன ரூடராய் எழுந்தருளி வந்து காட்சி கொடுத்து நீர் கேட்ட வரத்தைக் கொடுப்பார் என்று வால்மீக மகரிசி சொன்னார்.

அதைக்கேட் பரமேஸ்வரி சந்தோஷப்பட்டு பிறகு வால்மீகியானவர் ஈஸ்வரி கையினால் சகல சாமான்களும் தருவித்து ஐப்பசி மாதத்திலே சுக்கில பட்ச தசமிதொடங்கி அபரபட்ச சதுர்த்தசி அமாவாசை வரைக்கும் இருபத்தொருநாளும் தினமும் ஸ்நானம் செய்து பரிசுத்த வஸ்திரம் தரிதத்துக் கொள்ளச் சொல்லி ஆல விருட்சத்தின் கிழே மணலினாலே சிவலிங்கம் பிடித்துவைத்து ஈஸ்வராகப் பாவித்து அபிஷேகம் செய்து சந்தனாட்சதை புஷ்பஞ்சாத்தி தூபதீபம் பரிமாறி நைவேத்தியம் செய்து ஒரு வெல்ல உருண்டை ஒருசந்தன உருண்டை ஒரு மஞ்சள் உருண்டை ஒரு அதிரசம் ஒருபழம் ஒருபாக்கு ஒரு வெற்றிலை இவைகளையெல்லாம் நேமமாக வைத்து நைவேத்தியம் செய்து தூப தீபம் கொடுத்த சுகந்த வில்வ அர்ச்சனை செய்து நமஸ்காரம் செய்வித்து இருபத்தொருயிழையிலே ஒரு நூலும் வைத்து அதிலே ஒரு நைவேத்தியத்தை சாப்பிடச் சொல்லி இப்படி ஈஸ்வரியாள் கையினாலே இருபத்தொருநாள் பூசை செய்வித்து இருபத்தொரு பழம் இருபத்தொரு அதிரசம் இருபர்தொரு மஞ்சளுரண்டையும் நைவேத்தியம் செய்த தூபதீபங கொடுத்து இருபத்தொருயிழையிலே தோறணித்து இருபத்தொரு முடி முடித்து தரித்துக்கொண்டு அர்ச்சனை செய்து ஈஸ்வரிநமஸ்காரஞ் செய்து தோத்தரிக்கும் போது கைலாயத்திலிருந்து பரமேஸ்வரர் ரிஷப வாகனத்தின் பேரிலே பிரம்மா, விஷ்ணு தேவேந்திரன் முதலான தேவர்கள் ரிசிகள் சூழத்தக்கதாகப் பார்வதா தேவிக்கு முன்பாக வந்து ஒய் பராசக்தி உமக்கென்ன வேண்டுமென்று கேட்க உம் சரீரத்திலே அர்த்த சரீரம் வேண்டுமென்று கேட்க அப்படியே அர்த்தநாரீஸ்வரராய் காட்சி கொடுத்து இன்று முதல் இந்த விரத்த்தை யாதாமொருவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்கு வேண்டிய பாக்கியத்தை கொடுப்போமென்று சொல்லி கைலாயத்திற்கு எழுந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வித விசேடமான கேதாரி விரதத்தை தேவதாஸ்திரிகள் முதலானோரும் அநுஷ்டித்து வேண்டிய வரங்களைப் பெற்றார்கள். இப்படி நடந்து வருகின்ற நாளிலே பூலோகத்திலே மானிடர்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு தெய்வ லோகத்திலிருந்து தெய்வ கன்னியர்கள் பூலோகத்திற்கு வந்து ஒரு கெங்கைக் கரையிலே ஆலவிருட்சத்தின் கீழே அந்த இருபத்தெதாரு நாளும் அப்படியே னோற்பது வெகு அருமையென்று ஒரேதரமாய் ஐப்பசி மாதம் அபரபடசத்து சதுர்த்தசியில் அந்த தெய்வகன்னியர்கள் மணலினால் லிங்காகாரமாய் உண்டாக்கி வைத்து இருபத்தொருதரம் பூசைசெய்து இருபத்தொரு பழம், இருபத்தொரு அதிரசம், இருபத்தொரு வெல்லவுருண்டை, இருபத்தொரு சந்தணவுருண்டை, இருபத்தொரு மஞ்சளுருண்டை, ஈரபத்தொரு இளையிலே கயிறு அதிலே இருபத்தொரு முடிமுடிந்து வைத்து நைவேத்திய தூபதீபங்கள் கொடுத்து நல்ல சுகந்த புஷ்பங்கள் வில்வங்களாலே அர்ச்சனை செய்து வருகின்றனர்.

அவ்வேளையிலே ஒரு ராசாவுக்கு இரண்டு பெண்களுண்டு புண்ணியவதி, பாக்கியவதி என்னும் பெயரையுடைத்தானவர்கள். அந்தப் பெண்கள் தகப்பனார் மிகவும் தரித்திரர். இப்படியிருக்கும் அந்தப் பெண்களுக்கு கல்யாணமுமில்லை . அந்த இரண்டு பெண்களும் அன்றைக்கு கெங்கைக் கரைக்கு வந்தார்கள் அங்கே தெய்வகன்னியர்கள் நோன்பு நோற்கிறதைப் பார்த்து அம்மா நீங்கள் யார் இவ்விடத்தில் என்ன செய்கீறிர்கள் என்று கேட்க அப்படிக் கேட்ட பெண்களை தெய்வ கன்னியர்கள் பார்த்து விருத்தாந்தத்தைக் கேட்டு ஓ பெண்களே நாங்கள் தெய்வ கன்னியர்கள் பூர்வத்திலே இந்த நோன்பை பரமேஸ்வரி நோற்று ஈஸ்வரர் இடப்பாகம் பெற்றாள். இது கேதார ஈஸ்வர விரதம். இந்த நோன்பு நோக்கிறவர்களுக்கு நினைத்த காரியம் கைகூடுமென்று சொன்னார்கள்.

அப்போது அந்தப் பெண்கள் இந்த நோன்பு நோர்ககிற காலமும் இதன் நன்மையுஞ் சொல்ல வேண்டும்மென்று கேட்க புராட்டாதி மாதம் சுக்கில பட்சம் தசமி தொடங்கி ஐப்பசி கிருஸ்னபட்சம் (அமாவாசை) பரியந்தம் இருபத்தொரு நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் ஸ்நானம் செய்து பரிசுத்தமான வஸ்திரந் தரித்து ஈஸ்வரரை ஆலவிருட்சத்தின் கீழே மணிலினால் லிங்கமாக அமைத்து பூசை செய்து வருகிறதென்று கிரமாய் சொல்லி இது நோற்கிற

பேருக்கு சகல பாக்கியமும் பெறுவார்கள். அப்படி இருபத்தொரு நாள் செய்கிறதற்கு நம்மாலே முடியாது அதற்கு இயலதவர்கள் சதுர்த்தசியிலே ஸ்நானஞ் செய்து ஆலவிருட்சத்தின் கீழே மணலினாலே கேதார ஈஸ்வரரை பாவனை செய்து வைத்து பூசை செய்து தூபதீபங் கொடுத்து முறையே இருபத்தொரு சந்தணவுருண்டை, வெல்லவுருண்டை, மஞ்சளுருண்டை., பழம், அதிரசம் ,பாக்கு, வெற்றிலை இருபத்தொரு இளையிலே கயிறு அதிலே இருபத்தொரு முடி முடிந்து வைத்தது நைவேத்தியம் செய்து தூபதீபங்கொடுத்து அர்ச்சனை செய்து நமஸ்காரம் செய்து துதி பண்ணினால் அவர்களுக்கும் வேண்டிய பாக்கியத்தைக் கொடுப்பார் ஈஸ்வரரென்று சொன்னர்கள்,

அந்த இரண்டு இராஜ கன்னியர்களும் தெய்வ கன்னியரை வேண்டிக் கொண்டு தங்களிருப்பெல்லாம் சொல்லி எங்களை தேசாதிபதிகள் வந்து கலியாணஞ் செய்யத்தக்கதாகவும் அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமேயென்று பெண்கள் தெய்வ கன்னிகளை நமஸ்காரம் செய்ய அவர்கள் சந்தோசமாய் இந்த நோன்பை நோற்கும்படி பணித்துபலவகையுஞ் சொல்லி அவர்களுக்கு நூலில்லாமல் ஆலம் விழுதை எடுத்து அதிலே இருபத்தொரு முடி முடிந்து தாங்கள் படைக்கிறதுடனே கூடவைத்துப் படைத்துஅந்த நோன்பு தோரணத்தையிவர்கள் கையிலே கொடுத்து இந்தப்படி வருஷாவருஷம் நோன்பு நோற்று வாருங்கள் உங்களுக்கு வேண்டிய பாக்கியம் வரும் கலியாணமும் கைகூடுமென்று வாழ்த்தி ஆசிர்வாதஞ் செய்தனுப்பி தெய்வ கன்னியர்களும் தெய்வலோகம் சென்றார்கள்.

பிற்பாடு இந்தப் பெண்கள் இரண்டு பேரும் வீட்டுக்கு வரும் போது தங்கள் வீடு மாடமாளிகையும் சகல ஐஸ்வரியமாயிருக்கக்கண்டு தங்கள் வீடு முன்னேயிருந்தாப்போல இருக்கவில்லையே என்று மயங்கும் போது அவர்கள் தகப்பனார் முகசாலையிலே வந்து பெண்களை அழைத்துப் போய் அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்யவஷ்திரமும் திவ்யாபரணமும் கொடுத்துக் கொண்டு சந்தோசமாயிருக்கும் போது இராஜகிரியிலிருந்து ஒரு இராஜாவந்து பெண்கேட்டு புண்ணியவதியை சகல ஆடம்பரத்துடனே கலியாணஞ் செய்து கொண்டு போன பிற்பாடு அழகாபுரி பட்டணத்து இராஜகுமாரன் வந்து பாக்கியவதியை சகல அடம்பரத்துடனே கலியாணஞ் செய்து அழைத்தக் கொண்டு போனார்கள்.

அவர்களும் இந்த நோன்பு பலத்தினாலே நமக்கு அதிஷ்டம் வந்ததென்று வருஷா வருஷம் நோன்பு அநுசரித்து புத்திர சம்பத்து போகபாக்கியமுமாயிருகிறநாளையிலே பாக்கியவதி யென்கிறவள் தன்னுடைய துரதிஷ்டத்தினாலே நோன்பை மறந்து நோன்பு தோரணத்தை அவரைப்பந்தலின் பேரில் அவிழ்த்துப் போட்டுவிட்டாள். அப்படி மறந்துபோன படியினாலே மறுமண்டலத்து இராஜா சதுரங்க சேனையுடனே வந்து அழகாபுரிப்பட்டணத்தை கொள்ளையிட்டு பண்டிபண்டார சமஸ்தமும் வாங்கிக் கொண்டான். பாக்கியவதிக்கு தரித்திரம் வந்து பிரவேசித்து சாப்பாடுசாப்பிடுகிறதற்கும் பிரயாசப்பட்டு வாசலிலே அவரை செடியிலே மிகுதியாய்க் காய்க்கிற படியால் அந்த அவரைக்காயைப் பறித்து கிருட்சி செய்து கொண்டிருப்பாள் பாக்கியவதி யெண்ணாததெல்லாம் எண்ணி இராஜகிரியிலே தமக்கை வாழுகிறாளென்று பிள்ளையை யழைத்து இராஜகிரியிலே உன்னுடைய பெரியதாயாரண்டைக்குப் போய் நம்முடை வர்த்தமானங்களைச் சொல்லி சில திரவியம் வாங்கிவா வென்று வழிக்கு கட்டமுதுங் கட்டிக் கொடுத்தனுப்பினாள்.

அப்படியே அந்தப்பிள்ளை இராஜகிரிக்குப் போய்தன் பெரிய தாயாரைக் கண்டு தங்கள் வர்த்தமான மெல்லாஞ் சொல்ல அவள் தாபந்திரியப்பட்டு பிள்ளையை நாலு நாள் வைத்திருந்து சில வஸ்திரங்களும் ஆபரணமும் சில திரவிய முடிப்புங் கட்டிக் கொடுத்து கட்டமுதுங்கட்டி அனுப்பினாள் அதைவாங்கிக் கொண்டு சிலதூரம் வந்து ஒரு குளக்கரையிலே மூட்டையை வைத்துக் கட்டமுது சப்பிடுகிற வேளையிலே மூட்டையை கெருடனெடுத்துக் கொண்டு போய்விட்டது அதுகண்டு மனஸ்தாபப்பட்டு மறுபடியும் பெரியதாய் இடத்திற்கு போய் இந்த சேதியைச் சொன்னான் அப்படியாவென்று மறுபடியும் சில திரவியங்களை கட்டிக் கொடுத்தனுப்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையெடுத்துக் கொண்டு வரும்போது வழியிலே ஒரு திருடன் வந்து அடித்துப் பறித்துக் கொண்டு போனான் அப்போது துக்கப்பட்டு பெரியதாயாரண்டைக்கு போய் நாங்கள் பண்ணின பாவமென்னவோ தெரியாது இப்ப கொடுத்த திரவியத்தையும் திருடன் கொண்டு போனானென்று சொல்லக் கேட்ட உங்கள் தாயார் கேதார ஈஸ்வரர் நோன்பு நோற்று வருகிறாளா இல்லையா வென்று கேட்க அந்த நோன்பு இப்போநோற்கிறதில்லை முன்னே நோற்ற கயிற்றையும் அவரைப்பந்தலின் பேரில் போட்டுவிட்டாள் அன்று முதல் இப்படி வந்தாப்போல் காணுதென்றான்.

அப்படியாவென்று ஐப்பசி மாதம் வருந்தனிலும் பிள்ளையை வைத்திருந்து தான் நோற்கிற நோன்புடனே பாக்கியவதிக்கும் ஒரு நோன்பு வைத்து நோற்று அந்த நோன்புக் கயிறும் பலகாரமும் பாக்கு வெற்றிலை மஞ்சள் இனனும் சில ஆடையாபரணமும் திரவியமுங்கொடுத்து சில சேவகரையும் கூட்டி இந்த நோன்பைவிடாமல் நோற்கச் சொல்லி சில புத்தியுஞ் சொல்லி அனுப்பினாள்.

அப்போது வழியிலே வரும்போது முன்னே பறித்துப்போன திருடனும் திரவியத்தையும் கொண்டு வந்துகொடுத்தான் கெருடனும் மூட்டையைப்போட்டு உன்தாய் விரதம் நோற்காமல் விட்டதினாலே இப்படி வந்தது இனிமேல் பயபக்தியுடன் நோன்புநோற்க்க சொல்லென்று ஒரு சத்தமுண்டாகியது. அது கண்டு இந்தப்பிள்ளை ஆச்சரியப்பட்டு சந்தோஷத்துடன் தன் வீட்டுக்கு வந்து தன் தாயின் கையிலே நோன்பு தோரணமும் பலகாரமும் கொடுத்து தனத்தையுங் கொடுத்து நடந்த விஸ்தாரங்களையும் சொல்ல மெய்தான் என் ஆங்காரத்தினாலே கெட்டேனென்று ஸ்நானஞ் செய்து கேதார ஈஸ்வரனை நமஸ்காரம் செய்து கயிற்றை வாங்கி கட்டிக் கொண்டாள் அந்த நாழிகைக்கே தங்கள் பட்டணத்தை வாங்கிக் கொண்ட இராஜா வந்து தங்கள் பட்டணத்தையும் தங்கள் பண்டி பண்டாரம் ஆனை சேனையும் ஒப்பு வித்து பகுதியுங் கொடுத்துப் போய்விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் இவர்கள் பழையபடி தங்கள் சீமையை ஆண்டு கொண்டு சகல சாம்பிராச்சியமும் அனுபவித்துக் கொண்டு நோன்பையும் மறவாமல் செய்து வந்தார்கள.

ஆனபடியால் இந்த கேதார ஈஸ்வரர் நோன்ப யாதாமொருவர் தப்பாமல் செய்துவருகிறார்களோ அவர்களெல்லாம் புண்ணியவதி பாக்கிவதியைப் போல் இம்மையிற் பாக்கியத்தை அனுபவித்து மறுமையில் மோட்சத்ததையும் அடைவார்களென்று தரும புத்திர மகாராஜனுக்கு நாரதமா முனிவர் சொல்ல அப்படியே தரும புத்திர மகாராஜாவும் அனுபவித்து சத்துரு செயஞ் செய்து நாடு நகரமும் பெற்று மோட்சமடைந்தார்கள்

அரோகரா என்பதன் அர்த்தம்

ஹர என்ற சொல்லுக்குப் பாவங்களைப் போக்குவது என்று பொருள் ஹ என்ற எழுத்து தமிழில் அ என்று வரும் ஹரஓஹர என்ற சொல் தமிழில் அரோகரா என்று வந்தது. சிவநாமங்களில் அர என்று வந்தது. சிவநாமங்களில் அர என்ற சொல் உயர்ந்தது அரஹர என்ற இடையறாது உச்சரித்தால் பாவங்கள் தொலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் அர்ச்சனை மந்திரம்

விநாயகப் பெரமானை நாள்தோறும் காலை,மாலை பூக்களால்,அறுகம் புல்லால் அா.ச்சனை செய்ய நினைத்தகாரியம் இலகுவாக நிறவு பெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் சுமுகாய | நம: | ஓம் | தூமகேதுவே | நம: |
| ஓம் ஏகதந்தாய | நம: | ஓம் | கணாத்யஷாய | நம: |
| ஓம் கபிலாய | நம: | ஓம் | பாலசந்த்ராய | நம: |
| ஓம் கஜகர்ணகாய | நம: | ஓம் | வக்ர துண்டாய | நம: |
| ஓம் லம்போதராய | நம: | ஓம் | சூர்ப்பகர்ணாய | நம: |
| ஓம் விகடாய | நம: | ஓம் | ஹேரம்பாய | நம: |
| ஓம் கஜாநநாய | நம: | ஓம் | ஸ்கந்த பூர்வஜாய | நம: |
| ஓம் விநாயகாய | நம: | ஓம் | மகாகணபதயே | நம: |

சிவவழிபாடு செய்யும் போது சொல்ல வேண்டிய

## சிவ அர்ச்சனை மந்திரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் சிவாய | நம: | ஓம் | மஹேஸ்வராய | நம: |
| ஒம் கெசவாய | நம: | ஓம் | சிவாய | நம: |
| ஓம் ருத்ராய | நம: | ஓம் | சதாசிவாய | நம: |
| ஓம் சங்கராய | நம: | ஓம் | அச்யுதாய | நம: |
| ஓம் நீலகண்டாய | நம: | ஓம் | நிர்மலாய | நம: |
| ஒம் நாராயணாய | நம: | ஓம் | அருபருபாய | நம: |
| ஓம் கிருஷ்ணாய | நம: | ஓம் | ஆனந்தரூபாய | நம: |
| ஓம் பத்மநாபாய | நம: | ஓம் | கோவிந்தாய | நம: |
| ஓம் கங்காதராய | நம: | ஓம் | சூலபாணயே | நம: |
| ஒம் கைலாசவாசாய | நம: | ஓம் | ஈசான்யாயே | நம: |
| ஓம் திரிசூலாய | நம: | ஓம் | சிவபூஜாய | நம: |
| ஓம் மழுவேந்திராய | நம: | ஓம் | காலகண்டாய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | கபாலமூர்த்தியே | நம: | ஓம் | தாமோதராய | நம: |
| ஓம் | பரமகுருவே | நம: | ஓம் | பார்வதீபிராணேசாய | நம: |
| ஓம் | சாந்தருத்ராய | நம: | ஓம் | சற்குருவேய | நம: |
| ஓம் | மார்கக்ண்டாய | நம: | ஓம் | நந்திகேஸ்வராய | நம: |
| ஓம் | திரிபுரதஹனாய | நம: | ஓம் | கேதாரீஸ்வராய | நம: |

தினமும் சொல்ல வேண்டிய நாமம்

## நமச்சிவாய மந்திரம்

நமச்சிவாாய நமச்சிவாய நமச்சிவாய மந்திரம்
நாவினுக்குகந்த நாமம் நமசிவாய மந்தரம்
ஐந்தெழுத்து சிவபெருமான் ஆட்சிசெய்யும் மந்திரம்
ஆறெழுத்து சரவணமாய் காட்சி தரும் மந்திரம்
நம்பிவரும் மக்களுக்கு நோய்நொடியைப் போக்கிட
நன்மருந்தைக் கொடுக்கவந்த நீலகண்ட மந்திரம்
வைத்திய பணிபுரிந்து வையகத்தைக் காத்திட
வைத்திய நாதராக வந்துதித்த மந்திரம்
பிணிகளும் பேதைமையும் பின்தொடரா வண்ணமே
பனிபோல விலகவைக்கும் பரமசிவ மந்திரம்
தந்தை தாயும் தனையனோடு வாழுகின்றவீடிது
சந்தனமும் பன்னீரும் கமகமக்கும் காடிது
சுற்றிவரும் பகை வியாதி நம்மைவிட்டு ஒடவே
வெற்றிவேல் துணையிருக்கும் வீரசேகர் மந்திரம்
புள்ளிருக்க வேலூரெனும் புனிதமிகு பூமியாம்
பூதநாத கணங்களுக்கு கனிவுகாட்டும் சாமியாம்
வள்ளி தெய்வயானையொடு வரம் கொடுக்கும் முருகனை
வளர்த்தெடுத்து நமக்களித்து அம்மையப்பன் மந்திரம்
நிம்மதியும் குங்குமமும் திருச்சாந்து மண்ணுமே
சந்நிதியில் வழங்குகின்ற சுந்தரேசர் மந்திரம்
பக்குவமாய் ஞானமுடன் ஐயனடி போற்றிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் குறை போக்குகின்ற சொக்கநாத மந்திரம்
காசிக்குத்தான் போவோமே கர்மவினைகள் தீருமே
காசி விசுவநாதர் பாதம் கண்டிடுவோம் வாருமே
வாரணாசி போய்வந்தால் வறுமையெல்லாம் தீருமே
வம்மிசங்கள் அத்தனைக்கும் வளரும் செல்வம் சேருமே
திரிவேணி சங்கமத்தில் தீர்த்தமாடி வருவதால்
தீராத பாவம் நீங்கி தெய்வ நலம் சேருமே
அருவிபோல பெருகிவரும் கங்கையில் நீராடுவோம்
திருமகளாம் விசாலாட்சி தேவிபாதம் நாடுவோம்
பிச்சை போட்டு ரட்சிப்பாளே அன்னபூரணி
முச்சகமும் போற்றுகின்ற சர்வகாரணி
பூவினிலே வாசமில்லா புனிதமுள்ள சேத்திரம்
போய்வரும் பக்தர்க்கு காய்கனியில்லை சாத்திரம்
காலம் எல்லாம் கருடனில்லை பல்லி சொல்வதில்லையே
கருணையுள்ள வைரவர்தான் காத்து நிற்கும் எல்லையே
ஆதியிலே ராமர்க்காக ஆஞ்சநேயர் சென்றுமே
ஆவலோடு கொண்டுவந்த காசிராமலிங்கமே!

## கவசம் என்றால் பாதுகாப்பு என்ற பொருள்

## நாவினிக்க **சிவ கவசம்** ஓதவேண்டும்

( இந்தக் கவசம் பத்திராயுவென்னும் இராசகுமாரனுக்கு விடயமுனி அரளிச் செய்ததென்று கைமிசாரணிய முனிவருக்கு சூதமாகமுனிவர் அனுக்கிரகித்தது)

பங்கயத் தவிசின் மேவியிருந் துடற் பற்றுநீக்கி
அங்குநற் பூதசுத்தி யடைவுடன் செய்த பின்னர்க்
கங்கையைக் தரித்த சென்னிக் கற்பகத் தருவை செம்பொற்
கொங்கை வெற் பனைய பச்சைக் கொடியொடு உளததில் வைத்தே.

அகிலநாயகனாய் ஞான வானந்த ரூபியாகித்
துகள் தரு மணுவாய் வெற்பின் தோற்ற மாயிரை யெல்லார்
தகவுட னவனியாகித் தரிபப்வனெம்மை யிந்த
மகிதலமதனிற் தீமை மருவிடா தருளிக் காக்க. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரைபுன லுருவுங்கொண்டு கூழ்தொறும் பயன்கள் நல்கித்
தரையிடை உயிர்கள் யாவுந்தளர்ந்திடா வண்ணங் காப்போ
நிரைநிரை முகில்களீண்டி நெடுவரை முகட்டிற்பெய்யும்
விரைபுனலதனுள் வீழ்ந்து விளிந்திடா தெம்மைக்காக்க. 3

கடையுக ந்தன்னியல்லலா வுலகமுங் கடவுட்டீயா
னடலைசெய்த மலைதாள மறைதர நடிக்கு மீச
னிடைநெறி வளைதாபத்தி லெறிதரு சூரைக்காற்றிற்
றடைபடா தெம்மையிந்தத் தடங்கலுல கிற்காக்க. 4

தூயகண் மூன்றினோடு சுடரும் பொன்வதனம் ஐந்தும்
பாயுமான் மழுவினோடு பகர்வர தாபயங்கன்
மேயதிண் புயங்ணான்கு மிளிருமின்னனையதேசு
மாயதற்புருட னெம்மைக் குணதிசை யதனிற்காக்க. 5

மான்மழுசூலந்தோட்டி வனைதருமக் கமாலை
கூன் மலியங்கு சந்தீத் தமருகங்கொண்ட செங்கை
நான்முகமுக்கண்ணீல நள்ளிருள் வருணங்கொண்டே
ஆன்வரும் கோரமூர்த்தி தென்றிசைய தனிற்காக்க. 6

திவண்மறியக்கமாலை செங்கையோ ரிரண்டுந்தா
அவிர்தரு மிரண்டு செங்கை வரதத்தோடபயந்தாங்கக்
கவினிறை வதனநான்குங் கண்ணொரு மூன்றுங்காட்டுந்
தவளமா மேனிச் சத்தியோ நாதன் மேற்றிசையிற் காக்க. 7

கரைகெழுமழுவுமானு மபயங் கண்ணினாமம்
அறைதரு தொடயுஞ்செய்ய வங்கைக ணான்குமேந்திப்
பொறை கொணான்முகத்துமுக்கட பொன்னிறமேனியோடு
மறைபுகழ் வாமதேவன் வடதிசையதனிற் காக்க. 8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குசங்கபாலஞ்சூல மணிவர தாபயங்கள்
சங்குமான்பாசமக்கந் தமருகங் கரங்களேந்தித்

திங்களிற் றவனமேனி, திருமுக மைந்தும் பெற்ற
எங்களீசானதேவ னிருவிசம்பெங்குங் காக்க. 9

சந்திரமவுலிசென்னி தனிநுதற் கண்ணனெற்றி
மைதுறுபகன் கண்டொட்டோன் விரிவிழியகிலநாதன்
கொந்துணர் நாசிவேதங் கூறுவோன் செவி கபாலி
அந்தில்செங்க போலந்தூயவைம்முகன் வதனமுற்றும் 10

வளமறைபயிலு நாவ னாமணி நீலகண்டன்
களமடுபினாகபாணி கையினை தருமவாகு
கிளர்புயந் தக்கன்யா கங்கெடுத்தவன் மார்புதூய
ஒளிதருமேருவில்லி யுத்ரமன் மதனைக்காய்ந்தோன் 11

இடையி பமுகந்தோன் தானத யுத்திகம் ஈசன் என்னும்
புடை வளரரைகு பேர மித்திரன் பொருவில் வாமம்
படர்சக தீசன் சானுபாய தருமிடப கேது
விடை நெறி கணைக்கா லேந்தை விமலன் செம்பா தங்காக்க. 12

வருபகன் முதல் யாமத்து மகேசன் பின்னிரண்டாம் யாமம்
பொருவரு வாமதேவன் புகன்றிடு மூன்றாம்யாமஞ்
செருமலி மழுவாளங்கைத் திரியம்பகனாழாம் யாமம்
பெருவலி யிடபவூர்தி பிணியற இனிதுகாக்க 13

கங்குலின் முதல்யாமத்துக் கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய விரண்டாம்யாமஞ் சானவிதரித்தோன் காக்க
பொங்கிய மூன்றாம்யாமம் புரிசடையண்ணல் காக்க
பங்கமினாமிலாம்யாமங் கௌரிதனபதியே காக்க. 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்துள காலமெல்லா மந்தற்கடிந்தோனுள்ளுந்
தனிப்பெரு முதலாய் நின்ற சங்கரன் புறமுந்தானு
வன்புறுநடுவுந்தூய பசுபதி மற்று மெங்கு
நினைத்திடற் கரிய நோன்மைச் சதாசிவ நிமலன் காக்க 15

நிற்பழிப் புவனநா தனே குழி நிலமேனிட்
பொற்பிரமதா திநாத னிருப்புழிப் பொருவிலாத
அற்புத வேதவேத்திய னருந்துயில் கொள்ளுமாக்கண்
தற்பரசிவன் வழிக்குச் சாமளருத்திரன் காக்க. 16.

சிலைமுதற்றுருக்கந்தம்மிற் புராறிகாத்திடுகமன்னுஞ்
மலைவலிவேடரூபன் செறிந்த கானகத்திற் காக்க
கொலையமர் கற்பத்தண்ட கோடிகள் குலுங்கநக்குப்
பலபடிநடிக்கும்வீர பத்திரர் முழுதும் காக்க. 17.

பல்லுளைப்புரவித்திண்டேர் படுமதத் களிறுபாய்மா
வில்லுடைப்பதாதிதொக்கு மிடைந்திடு மெண்ணில் கோடி
கொல்லியன் மாலைவைவேர் குறுகலர் குறுகுக்காலை
வல்லியோர்பக்கன் செக்ககை பழுப்படைதுணித்துக்காக்க 18

தத்துநீர்ப் புணரியாடைத் தரணியைச் சுமந்துமானப்
பைத்தலை நெடியபாந்தட் பஃறலையனைந்துத்தேய்ந்து
முத்தலை படைத்ததொக்கு மூரிவெக்கண்ல் கொள்சூலம்
பொய்த்தொழிற் கள்வர் தம்மைப் பொருதலித்தீனிது காக்க. 19

முடங்குளை முதலாயுள்ள முழுவலிக்கொடியமாக்கள்
அடக்கலும்பினாக்கொல்க வென்நிவையனைத்து முள்ளந்
திடப்பட தினைந்துபாவஞ்சிவகவசந்தன்னை
யுடன்படத்தரிப்பையானாலுலம் பொருகுவவுத்தோளாய். 20

வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச பாதங்கள் போம் பகைகள் மாய்ந்திடும்
உ சிவமயம
அஞ்சலின் மறலியும் அஞ்சி யாட் செயும்
வங்ச நோ யொழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தங்சமென் றிதனைநீ தரித்தல் வேண்டுமால்

முற்றும்

## சக்திக் கவசம்

( தேவர்கள் தங்களுக்கு நெடுநாள் இடரிழைத்திருந்து துற்கனென்னும் அவுணனை உமாதேவியானவள் சங்கரித்து அவ்விடரை நீக்கியதுகண்டு அத்தேவியை வணக்கஞ் செய்துதுதி செய்து இக்கவசமென்றறிக.)

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமானியருளுனோடுந்
துங்கமென் சென்னி காக்க வயிணவி துகளிலாகம்
எங்கனுங் காக்க செய்ய வேந்தெழி லுருத்திராணி
தங்கு மெண்டி சையுமன்பு தழைத்திட இனிது காக்க. 1

கொன்னுனைச் சூலி சென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னு வெண்பிறை தாழ் சென்னி வயங்கொளி நெற்றி காக்க
பன்மையிற் புருவ நாளும் பரிவொடு உமையாள் காக்க
என்னையாண் முக்கணீச இறைவி கண்ணினைகள் காக்க 2

வயமிகு இமையவல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு விசையை மேல்கி ழிதனைச் சிறந்து காக்க
வயலிடைச் சுறுதி தூய வஞ்செவி காக்க கண்ணென்
பயின் மலருறையுஞ் செல்வி பல்லினை உவந்து காக்க. 3

சண்டி மென்கபோலங் காக்க தவளநாண் மலரின் வைகும்
ஒண்டொடி நன்னாக் காக்க விசயை மங்கலைமற்றறொவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியாயனி யெஞ்ஞான்று
முண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்து காக்க 4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காள முண்டிருடை நீலகண்டி மென்கழுத்துக் காக்க
கோளில் பூதாரசத்தி சுவுற் புறங்காக்கக் கூர்மி
நீளொளிச்சந்தி காக்க வயிந்திரி நெரியினோடுந்
தோளினைக் காக்க பத்மை துணை மலரங்கை காக்க 5

கமலை கைவிரல்கள் காக்க விரசை கையுகிர்கள் காக்க
திமிர முண்டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையுஞ் செல்வி
எம திருவாகு மூலங் காக்க வானவர்களேத்த
அழிர் தலகரி நாணா மகன் மணிமார்பங் காக்க. 6.

தரித்திரி யிதங்காக்க தயித்தியர்ச் செகுபோண் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினிலிறைமை பூண்டோடு
இருத்தகு வயிறு காக்க திகழ்த போகதி தன்னுள்ளந்
தருத்திய னுந்தி காக்க வசைவளர் முதுகு காக்க. 7

கருதருவி கடை காக்க கடிதலம்பாமை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க குகாரணி குய்யங் காக்க
அருடர வருமபாய கந்தினிய பானங் காக்க
தெருளுடைவிபுலை யென்றுஞ் சிறப்புடைக்குறங் காக்க 8

லளிதை மென்முழுந்தாள் காக்க வியற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்கமிக்க
அளிகொள் பாலதலத்திற் செல்வோ ளணிகெழு புறந்தாள் காக்க
ஒளிர் நகம் விரள்சந்திரி யுக்கிரியுவந்து காக்க. 9

தலத்துறை மடந்தையுள்ளங் காலினைக்காக்க தண்ணெண்
மலர்திரு மனையைக் காக்க வயங்கு கேத்திரதை யோங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலப்பில் கேத்திரங்கள் காக்க பிரியகரை யொழிவறாது
நலந்தரு மக்கடம்மை நன்குறக் காக்கவன்றே. 10

உயர்சனா தனியெஞ்ஞான்று மொழிவறும் ஆயுள் காக்க
அயர்வறு சீர்த்தியாவு மாதேவி காக்கமிக்க
செயிரறு தருமம்யாவந் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக்குலத்தை வாய்த்தகுலதேவி யினிதுகாக்க. 11

சற்கதி பிரதை நல்லோ ரியைபினைந் தயாவிற்காக்க
விற்கொடும் போரினீரில் வெளியினில் வனத்திற் சூதில்
இறபுற மதனி லோங்கு சாவாணி காக்க வென்னாப்
பொற்றரு மலர் சடுவிப் புங்கவ ரேத்தினாரே. 12.

சக்கி கவசம் முற்றிற்று
தாயே மிகவும் தயவுடையார் எனப் சாற்றுவர் இச்
சேயேன் படுந்தயர் நீக்கஎன் னேஉளம் செய்திலையே
நாயேன் பிழைஇனி நாடாது நல்லருள் நல்கவரு
வாயே எம் ஒற்றி மயிலே! வடிவுடை மாணிக்கமே.

இந்த வச்சிரபஞ்சரத்தை யாவர் சேபித்தாலும் அவர்களுடைய தேகத்திலுண்டாகிய வெப்பநோயொழியும். எட்டுத்தரஞ் சலத்தில் அபிமந்திரித்து அதனை உட்கொண்டால் வயிற்றிலே பொருந்திய குன்மஞ் சூலை முதலிய நோயனைத்தும் நீங்கும். இரவிலே வழி நடக்கும் போது செபித்தாலும் பூதம்பேய் இவைகள் தொடரமாட்டாவாம். பிள்ளையைப் பெற மாட்டாமல் வருத்தப்படுகின்ற மாதருடைய அருகிலிருந்த செபித்தாலும் அல்லது நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தாலும், விரைவிலே வருத்தம் நீங்கிப் பிள்ளை பெறுபவார்கள். யுத்தத்திலே சேபித்தால் சத்துருக்கள் தோல்வியடைவார்கள் இதை யாவரோதினாலும் வெர்களை உமாதேவி காப்பாற்றுவாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்நின்று செய்யுள் முறையாய் புனைதற்கு
என்நின்ற ருள்க எலியூர்தி - மன்னவா
சொற்குற்றம் ஏனைப்பொருள் சேர் தொடைக்குற்றம்
எக்குற்றம் வாராமலே
காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளி மகாதேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாய் முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோல போக்கிடுவாய்
உண்ணும்உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளி மகாதேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறுமுன்னே போட்டவளே
அசுரர் குலம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப்பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள்மாரி பொழிந்தாளே
வகையாற்று படலமிதைவழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத்திகைப் போர்க்கு நெறிமுறையைக்காட்டிவிடு
காப்பை புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத்தந்து விடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப் பருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைய தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பலவகைத் திரவியங்கள்
நானுனக்கு தாறேனம்மா நயந்தென்னைக் காரும் மம்மா
காளிமகா தேவியரே காசினிக்குவித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கு காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனதும் இளகிவிடும்
ஞானம் பெருகி வரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்தே அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோருக்குநினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்ல தெல்லாம் பெருகிவிடும்
நாள் கோள் இவையெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அமமா
காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்தென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும்பொழுதெல்லாம் நறும் காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப்பொழுதெழுந்து காப்பதில் விழித்திடுவேன்
ஞானக்கொழுஞ்சுடரே காளியுன்னைக்காணுகின்றேன்
காப்பெனக்கு கையில் லுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலேதும் கண்திறந்து காட்டுமம்மா
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசையும் விரதமொடு
தீமைச்செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக்கையிருந்து கண்திறந்து காட்டுமடி
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால முணர்வுமுண்டு
இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலக்கமொடு வந்திடவே
அச்சக்தியெல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிகாப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானங்கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்

கோதார கௌரி நோன்பு காலத்தில் கதைபடித்து பாவோதி
இப்பாடலை பாடி முழுப்பயன் அடைவோம்

அருமறை வாழி
யந்தணர் வாழி
யரையரும் வணிகரும் வாழி
பெருநிறை யுழவர் வாழி
பெண்களும் வாழியே யிதனை
யிரும்புவீயன் ளோர் படித்தவர்
கேட்டோ ரெழதிளோரிப் புராணத்தை
வரும் வட மொழியைக் தென்மொழியு ரைத்த
வணிகனா முருகப்பன் வாழியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈஸ்வர தியானம்

ஓம் நம : ஸிவாய பரமேச்வராய
சசி சேகராய நம ஓம்
பவாய குண ஸம்பவாய
சிவ தாண்டவாய நம, ஓம்

# ஸ்ரீமஹா லிங்காஷ்டகம்

1. ப்ரஹ்மமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மலபாஸித ஸோபித லிங்கம்
ஜத்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

2. தேவமுதி ப்ரவ ரார்ச்சித லிங்கம்
காமதஹும் கருணாகரா லிங்கம்
ராவண தர்ப்ப விநாசந லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

3. ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்திவிவர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸுராஸுர வந்தித லிங்கம்
தத்ப்ரணசாமி ஸதாசிவ லிங்கம்

4. கநகமகாமணி பூஷித லிங்கம்
பணிபதிவேஷ்டித ஸோபித லிங்கம்
தகூஸுயக்ஞ் விநாசக லிங்கம்
தத்ப்ரணசாமி ஸதாசிவ லிங்கம்

5. குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹாரஸு ஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர்பக்திபிர் ஏவச லிங்கம்
திநகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

7. அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

8. ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவந புஷ்ப ஸதார்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

# லிங்காஷ்டகம்

## (தமிழ்வடிவம்)

அயன் அரி தேவர் அர்ச்சிக்கும் லிங்கம்
துய்ய ஒளிச்சுடர் துலங்கிடும் லிங்கம்
பிறவித் துயரை அழித்திடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

தேவரும் முனிவரும் சேவிக்கும் லிங்கம்
காமனை எரித்துக் கருணைசெய் லிங்கம்
இராவணன் செருக்கை அழித்திட்ட லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமகம நறுமணம் கமழ்ந்திடும் லிங்கம்
புத்தியை வளர்த்திடும் பூரண லிங்கம்
சித்தர் சுராசுரர் சேவிக்கும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

பொன்மணி மாலை பொலிந்திடும் லிங்கம்
அரவணி இலக்கிடும் அழகிய லிங்கம்
தக்கனின் வேள்வியைத் தகர்த்திட்ட லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

குங்குமம் சந்தனம் குலவீடும் லிங்கம்
பங்கய மாலை ஒளிச்சிடும் லிங்கம்
சஞ்சித பாபத்தை நீக்கிடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

தேவ கணங்கள் வணங்கிடும் லிங்கம்
பாவீக்கும் பக்தரைப் பாலிக்கும் லிங்கம்
கோடி சூர்யப்ர காசமாம் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

அஷ்ட தளத்தை அணிந்திடும் லிங்கம்
அனைத்தையும் ஆக்கிடும் அற்புத லிங்கம்
பராத் பரம்பர மாத்மக லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

லிங்காஷ்டகமிதை லிங்கசந்நிதியீல்
இசைத்திடும் அன்பர்கள் இன்ப சுகத்தை
அடைவர் சிவசா யுச்சியம் பெறுவர்
சிவபோ கானந்தச் சிலிர்ப்புற வாழ்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

அகர வற்புத வாதி பராபரி
பகரு முத்தமிழ்ப் பங்கய சுந்தரி
வகர தத்துவ மந்திர நாயகி
சிகர சிற்ப சேவடி போற்றுவோம்

## நூல்

அருள்வடிவாகிய அன்னையே போற்றி
பொருள் தரும் கைலைப் புராதனிபோற்றி
அன்பர்க் கிரங்கும் அமிர்தமே போற்றி
இன்பம் சுரக்கும் இறைவியே போற்றி
அருவுருவாகிய அம்பிகை போற்றி
கருவுயிராகிய காரணி போற்றி
அற்புத நாடக அணங்கே போற்றி
தற்பராநந்தத் தாயே போற்றி
அகண்டா காசத் தடக்கமே போற்றி
திகழு மோங்காரத்திகம்பரி போற்றி
எண்ணெண் கலைகள் இசைத்தனை போற்றி
எண்ணெண் விளையாட்டி யற்றினை போற்றி
நாலெட்டறங்கள் நாட்டினாய் போற்றி
கோலமுச் சங்கம் கூடினாய் போற்றி
நான்கு பாதங்கள் நல்குவாய் போற்றி
தேன்தரு காவிற் சேலுதுவாய் போற்றி
ஆதியே நடுவே அந்தமே போற்றி
வேதநாத கலை விந்தே போற்றி
ஆயவைம் பூதத் தசைவே போற்றி
மாயை யறுக்கும் வரைமகள் போற்றி
ஆடலாலி கபரம் அளித்தாய் போற்றி
கூடலால் முத்தி கொடுப்பாய் போற்றி
ஆகமமனைத்தும் ஆனாய் போற்றி
போகமும் யோகமும் பொழிவாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம் புதுக்கும் ஆத்தாள் போற்றி
தாவர சங்கமத் தலைவியே போற்றி
பஞ்சகிருத்திய பவானியே போற்றி
கஞ்சத் தமர்ந்த கரும்பே போற்றி
வஞ்சனை நோய்க்கு மருந்தே போற்றி
மஞ்சுயர் மலைவளர் மனோகரி போற்றி
தஞ்சமென் பாரின் தவத்துணை போற்றி
பஞ்சம் தீர்க்கும் பார்வதி போற்றி
நெஞ்சக மமர்ந்த நிரஞ்சனி போற்றி
செஞ்சிலம் பணிந்த சிவகாமி போற்றி
அஞ்சாப் பெருநிலை அருள்வாய் போற்றி
துஞ்சா வாழ்வில் தொடுப்பாய் போற்றி
காவலாய் நிற்கும் காயத்திரி போற்றி
சாவினைநீக்கும் சாவித்திரி போற்றி
கம்மையி னமர்ந்த காமாட்சி போற்றி
வெம்பிணி தீர்த்த மீனாட்சி போற்றி
விண்ணுயிர் காசி விசாலாட்சி போற்றி
நமசிவாயப் பொருள் நாரணி போற்றி
சமயா தீதக் தனிமுதல் போற்றி
தலமெலாம் நிறைந்த சங்கரி போற்றி
பலமெலாம் படைத்த பகவதி போற்றி
கலசம் தாங்கிய கரத்தாய் போற்றி
சிலை மல ரேந்திய சியாமளி போற்றி
மயிலே கற்பக மணியே போற்றி
அயில் வேல் தந்த ஆரணி போற்றி
அம்புலி காட்டிய அபிராமி போற்றி
சும்பனை மாய்த்த சுதந்திரி போற்றி
மாளா மகிஷனை வதைத்தாய் போற்றி
வாளா லறநெறி வகுத்தாய் போற்றி
நாகம் புனைந்த நடேஸ்வரி போற்றி
வேகம்கெடுக்கும் வித்தகி போற்றி
ஐந்து கரத்தனை அருளினை போற்றி
கந்தனை யணைத்த கௌரி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையிலாடும் சிவமே போற்றி
பந்தனை யறுக்கும் பைரவி போற்றி
பிரமனை நடத்தும் பிராட்டியே போற்றி
பரமனை யகலா பரயே போற்றி
மங்களக் குங்கும வடிவாய் போற்றி
சிங்கமிசை வரும் சிங்காரி போற்றி
எங்கும்நிறைந்த இரட்சகி போற்றி
பொங்கும் வளம் தரும் பொன்மகள் போற்றி
வாக்கு வளங்கும் வாணியே போற்றி
ஊக்கம் பெருக்கும் உருத்திரி போற்றி
செம்மை நோய் தீர்க்கும் சிவசக்தி போற்றி
தொன்மை கடந்த சோதியே போற்றி
மனமணி லிங்க மந்திரம் போற்றி
சினமுதற் குற்றம் தீர்ப்பாய் போற்றி
கும்பிடும் பணியில் கூட்டுவாய் போற்றி
ஐம்புல வொடுக்கம் அருள்வாய் போற்றி
நிலை பெறு முலகெலாம் நிறைந்தாய் போற்றி
வலையறுத்தருட்கனி வளங்குவாய் போற்றி
சாந்த நிழல் தரும் தருவே போற்றி
தீந்தமிழ் மொழியாய்ச் செறிந்தாய் போற்றி
தவயோக மாற்றம் சாற்றுவாய் போற்றி
அவிரோத ஞானம் ஆற்றுவாய் போற்றி
பேசும் பிரணவப் பிழம்பே போற்றி
பூசும் நீற்றின் பொலிவே போற்றி
தேச விளக்காய் சிறந்தாய் போற்றி
வாச மலர்களாய் மலர்ந்தாய் போற்றி
எண்ணிய நலமெலாம் இசைப்பாய் போற்றி
பண்ணிய புண்ணியமபடைப்பாய் போற்றி
பரநலம் புரியப் பண்ணுவாய் போற்றி
குருநலம் காட்டும் கொண்டலே போற்றி
நானெனதெறும் பிழைநலிவாய் போற்றி
தானுணர் அறிவில் தங்குவாய் போற்றி
ஆறாதாரத் தடக்கமே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறாக்கிரியில் ஏற்றுவாய் போற்றி
துன்பிருள் துரத்தும் சுடரே போற்றி
ஒன்பது கோணிலை உடப்பாய் போற்றி
காலனை உதைத்திடு காலியே போற்றி
மூலமாய் அமர்ந்த முதல்வியே போற்றி
கங்கையிலுதித்த கன்னியே போற்றி
கங்கையாம் மங்கையாய்க் கதித்தாய் போற்றி
ஆலங் காட்டினில் ஆடினாய் போற்றி
மாலின் தங்கையாய் வந்தாய் போற்றி
நினைத்த வடிவமாய் நிற்பாய் போற்றி
மனிதப் பலவித வரைந்தாய் போற்றி
காண்பதுன் காட்சியாய்க் காட்டுவாய் போற்றி
பூண்பதுன் பணி எனப்பூட்டுவாய் போற்றி
வல்லமை தரும் ஓம் மகாதுர்க்கை போற்றி
செல்வம் தரும் ஓம் திருமகள் போற்றி
கல்வியைத் தரும் ஓம் கலைமகள் போற்றி
நல்வரம் தரும் ஓம் நவசக்தி போற்றி

## தீபாரதனைத் துதி

போற்றி ஓம் கௌரி போற்றி போற்றி என் றகத்திலன்புச்
சாற்றினி லூறி நிற்கும் தண்ணாடி யார்கள் -தம்மைக்
கூற்றினின் நெடியாசக் கொடுமை களனு கரவீட்டி
லேற்றியங் கருட்பாலூட்டும் இறைவியே போற்றி போற்றி

1. கேதார விரதம்
கேதார - வயலில் ஆலமரத்தடியில்
செய்யப்பட்டமையினதால் இப்பெயர் பெற்றது
2. கேதார கௌரி விரதம்
பார்வதியினால் அனுஷ்டிக்கப்பட்ட படியினால் இப்பெயா
பெற்றது
3. கேதாரேஸ்வர விரதம்
ஈசனை வழிபடுகின்ற படியினால் இப்பெயர் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிறகக் கட்டுரையே.

நூல்

### ஞானமும் நல் வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே 1

### பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழுந் தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையும் மெனபாசங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவ தறிந்தனமே. 2

### குடும்பக்கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின்னன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சாள்
மறிந்தே விழும் நரகுக் குறவாய மனிதரையே. 3

### உயர்பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மங்குன் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி யந்தரி பாதம்மென் சென்னியதே. 5

## மந்திர சித்தி பெற

சென்னியது உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்தன் பரமாகம பத்ததியே. 6

## மலையென வருந்தன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திந் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய் சிந்துர ஆனன சுந்தரியே 7

## பற்றுக்கள் நீங்கி பக்தி பெருகிட

சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே. 8

## அனைத்தும் வசமாக

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பொருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்து என்முன் நிற்கவே. 9

## மோட்சசாதனம் பெற

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதா மறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்தமான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே. 11

### தியானத்தில் நிலை பெற

கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன்னிரு பாதாம்புயத்தில் பகல் இரவா(க)
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏதுஎன் அம்மே புவி ஏழையும் பூத்தவளே. 12

### வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே. 13

### தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நற்றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளெ
பந்திப்பவர் அழயாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே. 14

### பெருஞ் செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக்கும் செவ்வமோ பெறுவார்மதி வானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கம் சொற்பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

### முக்காலமும் உணரும் திறன் உண்டாக

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தம் எல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்ரி துணை இரதி
பதிசயமான துபசயமாக முன் பார்த்திவர்தம்
மதிசயமாக அன்றொ வாமபாகத்தை வவ்வியதே. 17

### மரண பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியம் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே. 18

### பேரின்ப நிலையடைய

வெளிநின்ற நின்திருமேனியைப் பார்த்து என்விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம்திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19

### வீடுவாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோடி முடியோடி அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோ எந்தன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே. 20

### அம்பிகையை வழிபடாமல் இருந்தபாவம் தொலைய

மங்கலைய செங்கலசம் முலையாள்மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பொற்கொடியே. 21

### இனிப்பிறவாநெறி அடைய

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குத வம்பே பழுத்
படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்கு இனிப் பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே. 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது அன்பர் கூட்டம் தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. 23

### நோய்கள் விலக

மனியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மரந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே 24

### நினைத்த காரியம் நிறைவேற

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல்மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே. 25

### சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழு உலகினையம் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங்கே மணம்நாறும் நின்தாளிணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே. 26

### மனநோய் அகல

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும்பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே 27

### இம்மை மறுமை இன்பங்கள் அடைய

சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின்புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிலலோகமும் சித்திக்குமே. 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எல்லாசித்திகளும் அடைய

சித்தியும் சித்திதரும்தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும் சத்திதழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே. 29

### அடுத்து வரும் துன்பங்கள் நீங்க

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனிநான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே. 30

### மறுமையில் இன்பம் உண்டாக

உமையும் உமை ஒருபாகனும் ஏகஉருவில் வந்திங்கு
எமையும்தமக்கு அன்பு செய்யவைத்தாள் இனியெண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பார் ஒரு தாயுமில்லை
அமையும் அமையுறு தோழியர்மேல் வைத்த ஆசையுமே 31

### துர்மரணம் வராமலிருக்க

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை நின்பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என்சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே. 32

### இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

இழைக்கும் வினைவிழயே அடுங்காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சலென்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. 33

### சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

வந்தே சரணம் புகும் அடியாருக்கும் வானுலகம்
தந்தே பரிவோடு தான் போயிருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்க்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமணம் நிறைவேற

திங்கட் பசுவின் மணநாறும் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ தரங்கக் கடலுள்
வெங்கண்பணி யனைமேல் துயில்கூரும் விழுப்பொருளே 35

### பழைய வினைகள் வலிமை அழிய

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேது மின்றிஒளி வெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே 36

### நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலைவிட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே. 37

### வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38

### கருவிகளைக் கையாளும் வலிமைபெற

ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையேஅன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்புதொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே. 39

### பூர்வ புண்ணியம் பலன்தர

வாள்நுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லடியார் நட்புப்பெற

புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங் குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்துநம் அடியார்கள் நடுவிருக்க
பண்ணி நம்சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே. 41

### உலகினை வசப்படுத்து

இடம் கொண்டு விம்மிஇணை கொண்டிறுகி இளகிமுத்து
வடம்கொண்ட கொங்கை மாலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலம்கொண்ட நாயகிநல்லரவின்
படமகொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

### திமைகள் ஒழிய

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
திரிபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43

### பிரிவுணர்ச்சி அகல

தவளே இவளெங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையுமாயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வமுண்டாக மெய்த்தொண்டு செய்தே. 44

### உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரே இலரோ அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அதுகைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கையன்றே 45

### நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யோகநிலை அடைய

வாழும்படி ஒன்று கண்டுகொண்டேன் மனந்தே ஒருவர்
வீழும்படி அன்று விள்ளும்படி அன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே 47

### உடல் பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

### மரணத்துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே. 49

### அம்பிகையை நேரில் காண

நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகி யாதிஉடை யாள் சரணம் அரண் நமக்கே. 50

### மோகம் நீங்க

அரணம் பொருள் அன்று எருள் ஒன்றிலாத அசுரர் தங்கண்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே 51

### பெருஞ்செல்வம் அடைய

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமலையான் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு ளவாகிய சின்னங்களே. 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யுணர்வு நீங்க

சின்னஞ் சிறிய மருங்கினிற் சா்த்திய செய்யபட்டும்
பென்னம் பெரியமுலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரியகுழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப்பாா்க்கு இதுபோலும் தவமில்லையே. 53

### கடன் தீர

இல்லாமை செல்லி ஒருவா் தம்பால் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவா்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சோ்மின்களே. 54

### மோனநிலை எய்த

மின்னாயிரம் ஒருமெய் வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகம்மகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதனை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே. 55

### யாரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவாா்
அன்று ஆலிலையில் துயில்கின்ற பெம்மானும் என்ஐயனுமே. 56

### வறுமை ஒழிய

ஐயன் அளந்தபடி இருநாழிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவா் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உந்தன் மெய்யருளே. 57

### மன அமைதி பெற

அருணாம் புயத்தும் என்சித்தா ம்புயத்தும அமா்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசோ் நயனக்
கருணாம் புயமும் வதனா காரம்புயமும் கர அம்புயமும்
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே. 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் நல்லவர்களாக வளர

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு இக்கு அலராக நின்றாய் அறியாரெனினும்
பஞ்சஞ்சு மெல்அடியார் அடியார் பெற்ற பாலரையே. 59

அமய்யுஓர்வு பெற

பாலினும் சொல் இனியாய் பனி மாமலர்ப் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த் தலையே. 60

நயினும் கடையேனை ஆட்கொள்ள

நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன றியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத் தங்கச்சியே. 61

எத்தகைய அச்சமும் அகல

தங்கச் சிலைகொண்ட தானவர் முப்புரம் சாய்த்துமத
செங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறிபிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும் எப்போதுமென் சிந்தையதே. 62

அறிவு தெளிவோடு இருக்க

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல் கதிக்குக்
கூறும்பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே. 63

பக்தி பெருக

வீணே பலிகவர் தெய்வங்கள்பால் சென்றுமிக்க அன்பு
பூணேன் உனக்கன்பு பூண்டுகொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப் பிரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசைநான்கும் ககனமுமமே. 64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மகப்பேறு அடைய

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனமும் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்று எனத்தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லிநீ செய்த வல்லபமே. 65

கவிஞராக

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின்மலரடிச் செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும்பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் விற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்தொழுது மின்போலும் நின்தோற்ம் ஒரு
மாத்திரைப் போதுமனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றிநாளும் குடிகள் தொறும்
பாத்திரம் கொண்ட பலிக்குழலா நிற்பர்பார் எங்குமே. 67

நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாமசுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே. 68

சகல சௌபாக்கியங்களும் அடைய

தனம்தரும் கல்தவிதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 69

நுண்கலைகளில் சித்திபெற

கண் களிக்கும்படி கண்டுகொண்டென் கடம்பா டவியில்
பண் களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண் களிக்கும் பச்சை வண்ணமுமாகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன்பேரழகே. 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்குறைகள் தீர

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமா மதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே. 71

பிறவிப்பிணி தீர

என்குறைதீர நின்றேத்து கின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காணிருநீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறைதீர எம்கோன் சடைமேல் வைத்த தாமரையே. 72

குழைந்தைப்பேறு உண்டாக

தாமம் கடம்பு படை பஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளிசெம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே. 73

அதாழில் மேன்மை அடைய

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடி இணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும்பாடவும் பொற்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவதே. 74

விதியை வெல்ல

தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயார் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாம் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே. 75

தனக்கு உரிமையானதைப் பெற

குறித்தேன் மனத்தில் நின்கோலமெல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே. 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகை அச்சம் நீங்க

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலிவராகி என்றே
செயிர்அவி நான்மறைசேர் திருநாமங்கள் செப்புவரே. 77

### சகல செல்வங்களையும் அடைய

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல
அப்பும் கள அபிராமிவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே. 78

### கட்டுகளில் .ருந்து விடுபட

விழிக்கே அருளுண்டு அபிராமி வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழபட நெஞ்சுண்டு எமக்குஅவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்னகூட்டு இனியே. 79

### பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட

கூட்டியவா என்னைத் தன்னடியாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80

### நன்னடத்தை உண்டாக

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனதுனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே. 81

### மன ஒருமைப்பாடு அடைய

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்றஒளிர் திருமேனியை உள்ளும் தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய்விடின் எங்ஙனே மறப்பேன் நின்விரகினையே. 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவலர் பலர் எண்டாக

விரவும் புதுமலரிட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞசவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் கலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

சங்கடகங்கள் தீர

உடையானை ஒல்கு செம்பட்டு உடையானை ஒனிர்மதிச் செஞ்
சுடையானை வஞ்சகர் நெஞ்சடையானைத் தயங்க நுண்ணூல்
இடையானை எங்கள் பெம்மானிடையாளை இங்கு என்னை இனிப்
படையானை உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே. 84

துன்பங்கள் நீங்க

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச் சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என்அல்ல வெல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்துமாலையுமே. 85

ஆயுதபயம் நீங்க

மால்அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

செயற்கரிய செய்து புகழ்பெற

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாதநின் திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும்படி ஒருபாகம் கொண்டு ஆளும் பராபரையே. 87

எப்போதும் அம்பதை அருள்பெற

பரமென்று உனைஅடைந்தேன் தமியேனும் உன்பக்தருக்குள்
தரமென்று இவன்என்று தள்ளத்தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே. 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின்துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்று அறிவு
மறக்கும் பொழுது என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே. 89

கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எமக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே. 90

அரசாங்க செயலில் வெற்றிபெற

மெல்லிய நுண்ணிடை மின் அனையாளை விரி சடையோன்
புல்லிய மென்முலைப் பொன்அனை யாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே. 91

மனநிலை பக்குவமடைய

பதந்தே உருகிநின் பாதத்திலே மனம்பற்றி உன்தன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போன வழியும் சொல்லேன்
முதற்தேவர் மூவரும் யாவரும் போற்றும் மகிழ்நகையே. 92

உள்ளத்தில் ஒளியுண்டாக

நகையே இ·.து இந்த ஞாமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழமுலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

மனநிலை தூய்மையாக

விரும்பித் தொழும் அடியார் விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் கழித்து மொழிதடுமாறி முன்சொன்ன எல்லாம்
தரும் பித்தராவர் என்றால் அபிராமி சமயம் நன்றே. 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதி பெற

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே. 95

எங்கும் பெருமை பெற

கோமள வல்லியை அல்லியாந்தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே. 96

புகழும் அறமும் வளர

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தம் கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொரு படைக்கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற

தைவந்து நின்னடித்தாமரை சூடின சங்கரர்க்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்தது எங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள
பொய்வந்த நெஞ்சிற் புகஅறியா மடப் பூங்குயிலே. 98

அருள் உணர்வு வளர

குயிலாய் இருக்கும் கடம்ப அடவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத் திடைவந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே. 99

அம்பிகையே மனத்தில் காண

குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கைவல்லி
கழையப் பொருத திருநெடும் தோளும் கருப்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே. 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு
தீங்கில்லையே.

முற்றும்

## கப்பல் பாட்டு

ஏலேயலோ, ஏலையலோ, தத்தையா ஏலையலோ, ஏலையலோ.

வெய்யகனல் ஓங்கி நற்கரியம்பார்க்க
வெம்மறிலி, பாஞ்சாலி ஆஞ்சான் பிடிக்க
துய்யகுண மாரீசன் சுக்கான் பிடிக்க
சொல்லரிய ஈசனும் ஆட்கணங்களாக
பதுனைப்பில் இந்திரன் கற்பு நிலைபார்க்க
வெற்றிசை வர்ணனும் வெம்பாவே சாமபா
யையமிலா இரு தூலி ஓடலியாக
அகலவதி கலா அண்ணன் கலா அண்ணனாக
மயில்மேவும் மலைமேவும் ஆகாசக் கடலில்
வடிவுள்ள பாய் விரித்தோடுதே கப்பல்
ஏலையலோ, ஏலையலோ தத்தையா
ஏலையலோ, ஏலையலோ 1

பஞ்சபூதப்பலகையை கப்பலாய்ச்சேர்த்து
பாங்கான ஓங்கார பாய்மரம் நாட்டி
நெஞ்சுமனம் புத்தி ஆங்கார சித்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானபிமானமும் கயிறாகச்சேர்த்து
ஐந்தெழுத்தைக் கட்டிச் சரக்காக ஏற்றி
ஐம்புலன் தன்னிலே சுக்கான் நிறுத்தி
நெஞ்சுக்கடாச்சத்தால் சீனிப்பாய்த்தூக்கி
சிவனுடைய திருப்பொருளை சிந்தையில் நினைத்து
தங்சலானந்த வெள்ளத்தில் தானே போகுதடா
சர்வரதம், ஏகரதம் பிரமரம்
ஏலையலோ, ஏலையலோ, தத்தையா, எலையலோ
ஏலையலோ. 2

களவையும் கேள்வையும் தள்ளடா தள்ளு
கருணைகடலிலே தள்ளடாகப்பல்
நிற்குணம் தன்னிலே தள்ளடா தள்ளு
நிறைந்தபரி பூரணத்தால் தள்ளடா கப்பல்
திக்குத்திசை எங்கும் தள்ளடா தள்ளு
திருமந்திரம் சொல்லி தள்ளடா கப்பல்
முக்கண்ணை மூன்றையும் தள்ளடா தள்ளு
முப்பாலுக் கப்பாலே தள்ளடா கப்பல்
பக்கமுடன் கீழ்மேலும் தள்ளடா தள்ளு
பரவெளிக் ககப்பாலே போகுதடா கப்பல்
ஏலையலோ, ஏலையலோ தத்தையா எலையலோ.
எலையலோ. 3

வீரபத்திர சுவாமியவர் வீரவானேந்த
படைத்திர காளியம்மை பாணம் தொடுக்க
தக்கனதும் எச்சனதும் தலை சரிந்து வீழ
அரியுண்ட தேவர்களும் அலரியே யோட
விண்பட்ட பூதங்கள் பண்பட்டு ஓட
அலைமகளும் தலைமகளம் வெற்றிசைபாட
மலைமகளாம் பார்வதியும் மலர் மாரி சொரிய
வட்டூரில் வணிதைகள் வரவேற்புநல்க
வழிவழியா யடியார்கள் அம்மை புகழ்பாட
புளியமரம் வளர்ந்தோங்கும் பிட்டிநகர்
நோக்கி பிரியமுடன் கப்பல் வந்து
சேந்ததையா சுவாமி 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பயன்

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனினுடங்காது
பூக் கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பமற் சார்வார் தமக்கு

## பிழைபொறுத்தல்

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும்நின்ஞ்செழுத்தை
சொல்லாப்பிழையும் துதியாய்பிழையும் தொழப்பிழையும்
எல்லப்பிழையும் பொருத்தருள்வாய் கச்சியே கமபனே.

ஞான நடம் பயில் சங்கனே போற்றி போற்றி
ஞான நடம் பயில் சங்கரியே போற்றி போற்றி
ஞான நடம் பயில் சிவசக்கி ஞானாந்தினி போற்றி போற்றி
சிவ சக்தி ஞானானந்தம் போற்றி புண்ணியம் சேர்த்திடுவோம்

காலவைரவர்

சீர் கொண்ட செம் பொற்றிரு மேனியும் செம்முக மலரும்
கார் கொண்ட சாடையும் தண்டாயுதமும் கணங்களெட்டும்
சுடர் கொண்ட மூலிலைச் சூலமும் கொண்டருள் கூர்ந்த -
கொன்றைத
தார் கொண்ட வேணியனே காழியாபதுத் தாரணனே

முத்துமாரி அம்மன் வாசலிலே காத்தவராயன்
முன்னின்று காத்திடுவாய் காத்தவராஜா
காலமெல்லாம் உன்னருளே வேண்டுகிறேன்
கருணைபுரிந்து காத்துடுவாய் காத்தவராஜா
காத்தவராயா காத்தவராயா காத்தவராயா சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிவான வேண்டுகோள்

சொற்குற்றம் பொருட்குற்றம் எக்குற்றம் இருப்பினும் எனக்க நேரடியாக எழுதி அனுப்பதல் மூலமாக எனக்கு நல்வழி காட்டிய பெருமைக்குரியவர்களாவீர்கள்

இறை அனுபவமே உயர்வானது என்பதனை உணரவேண்டும் அதற்குவழி புராணங்கள், தெய்வீகநூல்கள் இதிகாசங்கள், தோத்திரங்கள், ஓதி இறையருள் பெறவேண்டும்.

இந்நூலுருப் பெற பெருதவிபுரிந்த பெயர் குறிப்பிட விரும்பாத அம்பாள்ளடிமை அவர்கட்கும் குடும்பத்தார்க்கும், அருளாசிச் செய்தி வழங்கிய நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் அவர்கட்கும் ஆசியுரை வழங்கிய தேவஸ்தான குரு முதல்வர் சிவஸ்ரீ த. வீரபத்திரக்குருக்கள் அவர்கட்கும், வாழ்துரை வழங்கிய இழைப்பாறிய அதிபர் திரு கு. சதாசிவமூர்த்தி அவர்கட்கும், அம்பாள் அருள் கடாட்சம் கிடைக்க பிராத்திக்கின்றேன்..

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றும் அறியேன் பராபரமே.

## வாழ்த்து

வாழிநின் சேவடி போற்றி பூம்பாதவாரிசங்கள்
வாழிநின் தாண்மலர் போற்றிநின் தண்ணளி வாழிநின் சீர்
வாழிஎன் உள்ளத்தில் நியுநின் ஒற்றி மகிழ்நரும் நீ
வாழி என் ஆருயிர் வாழ்வே வடிவுடைமாணிக்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயுதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகம் முந்துயர் திர்கவே

ஓங்கி உலகத்தை உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெங்து
ஓங்கு பெருஞ் செந்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புத்கிருந்து கீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நிங்காத செல்வம் நிறைந்தே லோ ரெம்பாவாய்

வான்முகில்வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்கை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்தசக்தி மங்களம் ஸர்வசக்தி மங்களம்
முத்துமாரி அம்பிகைக்கு மங்களம்
சீதா ராமா மங்களம் ராதா க்ருஷ்ண மங்களம்
மங்களம், மங்களம், மங்களம், சுப மங்களம்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உருத்திராக்ஷத்தின் மகிமை

உருத்திராக்ஷம் என்பது சிவபெருமான் திரிபுர தகனம் செய்யும்போது உடலிலிருந்து ஏற்பட்ட வியர்வை பூமியில் விழ அதிலிருந்து ஒரு விருக்ஷம் (மரம்) உண்டானது என்றும் அதுவே ருத்திராக்ஷ மரமாகும். இம்மரம் எனது அம்சமானது.இதன் காய்களை அணிபவர்களின் பாபங்களைப் போக்குகிறேன் என ஈசன் அருளியதாக பத்மபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. உருத்திராக்ஷ மணி வெள்ளை , சிவப்பு , மஞ்சள் , கறுப்பு நிறங்களில் உண்டு. ஆயினும் அதிகப்படியாக விளைவது சிவப்பு கறுப்பு ருத்திராக்ஷங்களே.

உருத்திராக்ஷ மரங்கள் ஹிமாலயம் , ஜாவாத்தீவு , நேபாளம் ஆகிய இடங்களில் அதிகமாக விளைகின்றது.

## பஞ்சாக்ஷரம்

சிவ வழிபாட்டுக்கு ஜீவஸ்தானமாகவுள்ள மஹா மந்திரம் நமசிவாய எனும் பஞ்சாக்ஷரமாகும்.

பஞ்சாக்ஷரம் பின்வரும் ஐந்து வகைப்படும்.

ஸ்தூல பஞ்சாக்ஷரம் - (நமசிவாய) , சூக்ஷம பஞ்சாக்ஷரம் -(சிவாய நம), காரண பஞ்சாக்ஷரம் - (சிவாய சிவ) , மஹா காரண பஞ்சாக்ஷரம் -(சிவ) மஹா மனு பஞ்சாக்ஷரம் - (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# ஔவையார் அறிவுரைகள்

## பெரியது

"பெரியது கேட்கினெரி தவழ வேலோய் !
பெரிது பெரிது புவனம் பெரிது !
புவனமோ , நான்முகன் படைப்பு ;
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன் ;
கரிய மாலோ , அலைகடற் றுயின்றோன் ;
அலைகடல் குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன் ;
கலசமோ , புவியிற் சிறுமண் ;
புவியோ , அரவினுக் கொருதலைப் பாரம் ;
அரவோ , உமையவள் சிறுவிரல் மோதிரம் ;
உமையோ , இறைவர் பாகத் தொடுக்கம் ;
இறைவரோ , தொண்டருள்ளத் தொடுக்கம் ;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!"

## அரியது

"அரியது கேட்கின் வரிவடி வேலோய் !
அரிதரிது மானிட ராத லரிது !
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது !
பேடு நீங்கிப் பிறந்த காலையில்
ஞானமுங் கல்வியும் நயத்தலரிது !
ஞானமுங் கல்வியும் நயந்த காலையில்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது !
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே !"

ஆசிரியர்.

*Cover Design By Senthu Graphics , post office rd,chavakachcheri. 0779236341*
*Paper works pothigai , No 114 ,kandy road, chavakachcheri.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org